விலை: 30.00
பக்கங்கள் : பன்னிரண்டு + 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

# வலம்புரி
# Valampurii




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 07 ஞாயிற்றுக்கிழமை (24.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309

## 13ஐ அமுல்படுத்துக

தமிழ்க் கட்சிகள் ஒருமித்து
இந்தியாவிடம் கோர ஏற்பாடு

நவம்பர் 2 யாழில் கலந்துரையாடல்



*(யாழ்ப்பாணம்)*

*13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்ய உதவுமாறு இந்தியாவிடம் கூட்டாகக் கோர தமிழ்க் கட்சிகள் ஏற்பாடு செய்துள்ளன.*

*நவம்பர் 2ஆம் திகதி யாழில் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.*

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## பாதுகாப்பான சூழல்
## வட மாகாணத்தில் உருவாக்கப்படும்

### ஆளுநர் ஜீவன் தியாகராஜா



*(யாழ்ப்பாணம்)*

**பாதுகாப்பான சூழல் வட மாகாணத்தில் உருவாக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உறுதியளித்துள்ளார்.**

யாழில் நேற்று திணைக்களத் தலைவர் களை சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார். 11

## எந்தத் தடைகள் வந்தாலும்
## பசுமை விவசாயத்தை வெற்றி பெறச் செய்வேன்

மக்களைத் தூண்டும் அரசியலில்
சிக்கிக் கொள்ள வேண்டாம் - ஜனாதிபதி



*(கொழும்பு)*

**யுத்தத்தில் கைவைக்க வேண்டாம் என்று பலர் கேட்டுக் கொண்ட போதிலும் 30 ஆண்டு கால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்ததைப் போலவே, எந்தத் தடைகள் ஏற்பட்டாலும் பசுமை விவசாயத்தை வெற்றி பெறச் செய்வேன் என ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.**

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## அரிசி, பருப்பு விலையை பார்க்கவா என்னை நியமித்தீர்கள்?

ஜனாதிபதி கோட்டா கேள்வி

(கொழும்பு)

அரிசி மற்றும் பருப்பு விலைகளை பார்த்துக் கொள்வதற்காகவா என்னை நியமித்தீர்கள்? என கேள்வி எழுப்பியிருக்கும் ஜனாதிபதி அந்த வேலைக்கு நான் தேவையில்லை எனவும் கூறியுள்ளார்.

100 சதவீதம் கரிம உரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய பண்ணை ஒன்றை பார்வையிட நேற்று சென்றபோது ஜனாதிபதி இதனை தெரிவித் 11

## 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு
## கோவிட் தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றத்திற்கு அவசியமான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிறுவர் நோய் விசேட வைத்தியர்களின் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு எவ்வாறு தடுப்பூசி ஏற்றுவது என்பது குறித்து 11

## இலங்கையில் எலிக்காய்ச்சலால் இருவர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்று பரவல் அபாயம் நீடித்து வரும் நிலையில் மறுபக்கம் டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் அபாயமும் தீவிரமடைந்து வருகின்றது. 11

## பெற்றோலை 20 ரூபாயாலும் டீசலை 30 ரூபாயாலும் உயர்த்துக

அமைச்சரவையில் இன்று யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

பெற்றோல் ஒரு லீற்றரின் விலையை 20 ரூபாயாலும் டீசல் ஒரு லீற்றரின் விலையை 30 ரூபாயாலும் அதிகரிக்குமாறு வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் யோசனை முன்வைத்துள்ளோம்.

இவ்விடயம் குறித்து இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் யோசனை முன்வைப்பதாக அமைச் 11

## ஜனாதிபதி கோட்டா ஸ்கொட்லாந்து பயணமாகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான கிளாஸ்கோ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ் வாரம் இறுதியில் 11

## மதவழிபாட்டுத் தலங்களில் 50 பேருக்கு மேல் ஒன்றுகூட தடை

சுகாதார வழிகாட்டல் வெளியீடு

(கொழும்பு)

ஆலயங்கள் உள்ளிட்ட மத வழிபாட்டுத் தலங்களில் ஒன்று கூடக்கூடிய உச்ச எண்ணிக்கை ஐம்பதாக வரையறுக் கப்பட்டுள்ளது. 11

## கொரோனாவால் வடக்கில் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொரோனாவால் வடக்கில் மேலும் இரு 11

## வெலிக்கடைச் சிறையில் கைதிகள் கலவரம்

சொத்துக்கள் சேதம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட கைதிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.

பல சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதுடன் உயிர் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை. 11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தேவை

பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தென்னந் தோப்பு பராமரிப்பதற்கும் நெற் பயிர்ச் செய்கையில் அனுபவமுள்ளவரும் தேவை. தனி நபரோ அல்லது சிறு குடும்பமாகவோ விரும்பத்தக்கது. தங்குமிட வசதி உண்டு. (8367)

**077 628 4164**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 37 வயது விவாகரத்தான செவ்வாய் குற்றமற்ற மணமகளுக்கு மணமகனை இலங்கையில் தேடுகின்றோம். (8380)

தொடர்புகளுக்கு

**077 887 6969**
**077 650 5097**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8263)

**☎-070 640 5951**
e-mail : engchelvam@gmail.com

## ஏல விற்பனை

### கல்யாண் அடைவு கடை

23.10.2020 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகளின் முதலையும் வட்டியையும் செலுத்தி 25.10.2021 முன்னர் பெற்றுக் கொள்ளவும். தவறின் 26.10.2021 அன்றைய தினம் ஏல விற்பனை செய்யப்படும்.

(8363) முகாமையாளர்

இல. 13, கஸ்தூரியார் வீதி,
செம்மா தெரு, யாழ்ப்பாணம்.

## சொர்க்கம் திருமண சேவை

இலண்டனில் பிரஜாவுரிமை பெற்ற 31 வயது, 7 இல் செவ்வாய், சதய நட்சத்திர மணமகனுக்கு இலங்கையில் மணமகளையும்
இலண்டனில் 35 வயது 4 இல் செவ்வாய் பூர நட்சத்திரம் மணமகனுக்கு மணமகளையும் தேடுகின்றோம். (8379)

தொடர்புகளுக்கு

**077 650 5097, 021 222 1515**
**001416661855**

## ROOMS வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அடைக்கல மாதா ஆலய பின்புறப் பக்கத்தில் உள்ள செ்ன். பீற்றர்ஸ் லேனில் குளியலறையுடன் இணைந்த Rooms வாடகைக்கு உண்டு. (8369)

**077 432 5429**
**075 144 4660**

## மருந்தக உதவியாளர் தேவை

யாழ். மாவட்டத்தில் உள்ள மருந்தகம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள மருந்தக உதவியாளர் தேவை.

தொடர்பு (8382)

**076 939 1976**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஸ்ரீரஞ்சினி தர்மகுலசிங்கம்**

கள்ளமற்ற மனமும்
களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள்
மனதை விட்டு நீங்காது.

பிறப்பு 04.04.1962
இறப்பு 16.11.2019
திதி - 24.10.2021

மகாத்மா வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

குடும்பத்தினர் (8338)

## மணமகள்கள் தேவை

- 1987, இந்து, சித்திரை, A/L, வர்த்தகர்.
- 1982, இந்து, திருவாதிரை, O/L, வர்த்தகர் - விவாகரத்து பெற்றவர்.

(8373)

**077 978 9341**

## காணி விற்பனைக்கு


யாழ். ஸ்ரான்லி வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு

**077 892 8094**

## மரண அறிவித்தல்

### மனோன்மணி பாலசுப்பிரமணியம்



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி பாலசுப்பிரமணியம் நேற்று (23.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தையலம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியத்தின் ( ஓய்வுநிலை உத்தியோகத்தர் - யாழ். நீதிமன்றம் ) அன்பு மனைவியும் பாஸ்கரன் (வேலை மேற்பார்வை உத்தியோகத்தர் - யாழ். மாநகர சபை), சிறிகரன், யசோதரா, காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் ஜெசிதரா, சுபகரன், கரன் (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), தாரணி (குடும்பநல உத்தியோகத்தர் - கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), விஸ்ணுகா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், ரஞ்சனாதேவி மற்றும் மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பிள்ளையம்மா, நாகராசா மற்றும் பூமணி, சந்திரராணி, குகமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் செல்வகௌரி, பிரியதக்ஷினி, இந்திரராசா, தவச்செல்வி, காலஞ்சென்ற அமுதகௌரி, சாண்டில்யன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன், நிறோஜினி, அபிஷேக், ஆகாஹ், ஆதவன், அர்ஜீன், தக்ஷ்னா, வைஷ்ணவன், அகிசன், ப்ருத்வியன், ஜெய்ஷ்ணவி, யஷ்மிதா, ருஷ்ணவி, ஒயஷ்வினி, இலக்கியா, அன்விதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை இல. 286, செம்மணி றோட், நாயன்மார்கட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (8371)


இல. 286, செம்மணி றோட்,
நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

076 701 1431

தகவல் :-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 - 12 - 1980



மறைவு
23 - 10 - 2021

### சிவஸ்ரீ இராம தயாபர சர்மா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கண்டி கலஹாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ இராம தயாபர சர்மா நேற்று (23.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதக்குருக்கள் மற்றும் நாகேஸ்வரியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் ஜெயராணியின் பாசமிகு கணவரும் அர்ஜினேஸ்வர சர்மா, காருண்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோமாஸ்க்கந்தக்குருக்கள், சிவபாலக்குருக்கள், பாஸ்கர சர்மா ஜெயபாலக் குருக்கள், இரவீந்திர சர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது நல்லூர் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (8383)

நல்லூர்

077 335 7419
077 463 0040

தகவல் :-
குடும்பத்தினர்

# இலங்கையை கண்காணிக்கும் நடவடிக்கையில் இறங்கியது ஐ.நா.ஆணையாளர் அலுவலகம்

**(கொழும்பு) மனித உரிமைகள் , நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கம் ஆட்சேபனைகளை தெரிவித்திருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தொடங்கியுள்ளது.**

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவித்து கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி இலங்கைக்கு எதிராக 46 கீழ் ஒன்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்கு பாரதூரமான மனித உரிமை மீறல்களிற்கான ஆதாரங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் பொறுப்பை வழங்கியுள்ளதுடன் அறிக்கையிட வேண்டிய காலக் கெடுவையும் வழங்கியது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் உட்பட இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து அறிக்கையிடுமாறு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திற்கு மனித உரிமைகள் பேரவை கோரிக்கை விடுத்தது.

இந்நிலையில் குறித்த ஆணைக்கு இணங்க, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் பொறுப்புக் கூறல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதுடன் இந்த குழு ஜெனிவாவை தளமாகக் கொண்டு செயற்படும் என்றும் அறிவித்துள்ளது. (நி-5)

# மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

(கொழும்பு)

மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் செயற்படும் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு நடந்துகொள்பவர்கள் தொடர்பாக அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் செயலாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண ஆளுநர்களுக்கு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற கூட்டத்தின்போதே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் உறுப்பினர்களின் நடவடிக்கை இருந்தால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பது ஆளுநர்களின் கடமை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் இணைத்துக் கொள்ள விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி-5)


### தேவை

நிரந்தர வீட்டு வேலைக்கு கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து ஆட்கள் தேவை. முதியோர் பராமரிப்பு, மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். C-1501

021 439 9277, 074 055 5922

### மேசன்பாஸ்மார்கள் வேலைக்கு தேவை

கொழும்பில் பெரிய அளவு வீடு கட்டும் நிறுவனத்திற்கு மேசன்பாஸ்மார்கள் தேவை. 3 வருடம், 4 வருடம் அனுபவம் கண்டிப்பாகத் தேவை. தங்கும் வசதி, உணவு இலவசமாகத் தரப்படும். வேலைக்கு தகுந்த நிறைவான சம்பளம் தரப்படும்.

தொடர்பு:-076 767 7320, 077 772 2164 C-1503

### 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 07 10 1937

மறைவு 10 09 2021

அமரர் செல்லத்துரை சுப்பிரமணியம் (J.P)

(ஓய்வு நிலை நில அளவை அத்தியட்சகர்)

எமது குடும்பத் தலைவர் **செல்லத்துரை சுப்பிரமணியம்** அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியினை அறிந்து இக்கட்டான சூழ்நிலையிலும் நேரில் வந்து அஞ்சலி தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து உதவி புரிந்த உற்றார், உறவினர்கள, நண்பர்கள், அயலவர்களுக்கும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப் பிரசுரம், பதாகைகள், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

424/1/1, கில்னர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (8351)

குடும்பத்தினர் 021 222 2470 077 921 3869

### வாடகைக்கு

சங்கானையில் அமைந்துள்ள வீடொன்றில் அறை வாடகைக்கு உண்டு. அரச, தனியார் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-076 217 4179
021 225 0421

### பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வயோதிபப் பெண்ணொருவரைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.

தொடர்பு:-077 512 2931 8355

### பகிரங்க ஏல விற்பனை

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

எம்மால் 24.08.2021 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்ட ஏலவிற்பனை நிகழ்வு 02.11.2021 ஆம் திகதி நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன். (இ)

பிரதிப்பணிப்பாளர்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள தொழில்துறை மற்றும் வீட்டு இரசாயனங்கள் (Industrial and Household chemicals Items) தயாரிப்புகள் சந்தைப்படுத்தும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலை வெற்றிடங்கள் உள்ளன.:

1. விற்பனை முகாமையாளர் (Sales Manager)
2. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நிர்வாகி (Sales and Marketing Executive)
3. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உதவியாளர் (Sales and Marketing Assistant)

உங்கள் சுயவிபரக் கோவையை (Curriculum Vitae) எமது மின்னஞ்சல் முகவரி findjobjaffna@gmail.com 29/10/2021 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும்.

**இந்த துறையில் முன் அனுபவம், வாகனசாரதி பத்திரம், ஆங்கிலம், சிங்களமொழி அறிவு மேலதிக தகமைகளாக கொள்ளப்படும்.**

E-Mail: findjobjaffna@gmail. com
phone:077 200 8484 C-1502

### விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 1437 244 6737 (Canada mobile viber)
076 349 0083 (Mobile Viber)

**இலங்கையில் மணமகள் தேவை**

01. வயது 36 கனடா சிற்றிசன் ரோகினி செவ் 07 இல் 62 பாவம்.
02. வயது 34 இலண்டன் சிற்றிசன் விசாகம் Side Engineer BSC
03. வயது 38 கனடா சிற்றிசன் விசாகம் செவ் 12 இல் BAKER
04. வயது 34 இலண்டன் சிற்றிசன் அத்தம் பாவம் 50
05. வயது 28 கனடா சிற்றிசன் விசாகம் செவ் 07 இல் பாவம் 44 MACHINE Operator
06. வயது 28 கனடா சிற்றிசன் பாவம் 27. Truck Driver

**வெளிநாட்டில் மணமகன் தேவை**

01. வயது 26 சதயம் கிரகபாவம் 20 சூரி + செவ் 04 இல்
02. வயது 27 பூராடம் சூரி + செவ் 11 இல் பாவம் 27
03. வயது 42 அனுசம் செவ் 7 இல் கிரகபாவம் 95 பட்டதாரி
04. வயது 26 உத்திராடம் சூரி + செவ் 05 கிரகபாவம் 16 பட்டதாரி
05. வயது 25 உத்திரட்டாதி சூரி + செவ் 02 கிரக பாவம் 16 பட்டதாரி
06. வயது 29 சதயம் BSC சூரி + செவ் 12 இல் பாவம் 40

தொடர்புகளுக்கு:- 076 349 0083 mobile viber
1437 244 6737 கனடா viber
+4917643399372 Germany 8370

# நெதர்லாந்தை சுருட்டிப்போட்டது இலங்கை

இருபதுக்கு 20 உலகக் கிண்ண தகுதி காண் சுற்றின் இறுதிப்போட்டியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற போட்டியில் இலங்கை மற்றும் நெத்ர்லாந்து அணிகள் மோதின.

இப்போட்டியில் நெதர்லாந்து அணியை 10 ஓவர் களுக்குள் சுருட்டிய இலங்கை அணி வெறும் 44 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தடிய நெதர்லாந்து அணி இலங்கை அணியின் சுழலில் சிக்கி சின்னா பின்னமாகியது.

முதல் விக்கெட்டுக்காக மெக்ஸ் ஓ டௌட் 2 ஓட்ட ங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து வந்த ஏனைய வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டு களைப் பறிகொடுக்க 10 ஓவர்களில் 44 ஓட்டங் களுக்கு நெதர்லாந்து அணி சுருண்டது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் மிரட்டிய வனிந்து ஹசரங்க மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 3 விக் கெட்டுகளை வீழ்த்தினர். மகேஷ் தீக் ஷன 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.



இதனையடுத்து மிகவும் சுலபமான ஓட்ட இலக்கை விரட்ட துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம் பத்துடுப்பாட்ட வீரரான பதும் நிஷங்க ஓட்டமேதனையும் பெறாமல் ஆட்டமிழந்து வெளியேறி அதிர்ச்சி யளித்தார்.

அதன்பின்னர் வந்த சரித் அசலங்க வும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளி யேற, குசல் ஜனித் பெரேரா 33 ஓட்டங் களைப் பெற இலங்கை அணி 7.1 ஓவர் களில் 2 விக்கெட்டுகளை இழந்து 45 ஓட் டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (4-6)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நளாயினி முரளீதரன் அவர்களின்
பாசமிகு தந்தையார்

### வேலுப்பிள்ளை இராசதுரை



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
(C - 2871)


## டென்மார்க் ஓபன்; சிந்து தோல்வி

டென்மார்க் ஓபன் பட்மிண்டன் போட் டியில் சிந்து காலிறுதியில் தோல்வி அடைந் துள்ளார்.

டென்மார்க் ஓபன் பட்மிண்டன் போட் டிகள் அந்நாட்டின் ஒடென்ஸ் நகரில் நடை பெற்று வருகின்றது. இதில் மகளிர் ஒற் றையர் போட்டி காலிறுதியில் பி.வி. சிந்து, தென் கொரியாவின் சியோங் உடன் விளை யாடினார்.

இந்த போட்டியில் 11-21, 12-21 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்து சிந்து வெளியேறியுள்ளார். இதனால் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சவால் முடிவுக்கு வந்துள்ளது. (4-6)


## மரண அறிவித்தல்

மலர்வு 16 - 02 - 1937



உதிர்வு 21 - 10 - 2021

### கந்தையா செல்லையா

(ஓய்வுபெற்ற அதிபர்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கை பிறப்பிடமாகவும் தண்ணீரூற்று மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா கடந்த 21.10.2021 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்வதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் குலறாதனின் (விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி) அன்புத் தந்தையும் மஞ்சுளாவின் (ஆசிரியை - யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை) மாமனாரும் சேயோனின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான வியாழம்மா, சிவபாக்கியம், சோமசுந்தரம், நேசமலர் மற்றும் இராசேந்திரம், ஜீவரஞ்சிதம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.10.2021 அன்று நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

423/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(8381)

தகவல்: குடும்பத்தினர்
021 222 0446



## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு வல்லிபுரம்

(முன்னாள் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனவின் கார்ச் சாரதி)



பிறப்பு 18.02.1937

இறப்பு 23.10.2021

காரைநகரைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டியார் தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வல்லிபுரம் (முன்னாள் ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தனவின் கார்ச் சாரதி) நேற்று (23.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிர்காமு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், நடராஜா, சிவசிதம்பரம், லோகநாதன் ஆகியோரின் சகோதரனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வசந்தன் மற்றும் புஸ்பராணி, ஜெயராணி, விஜயராணி, செல்வராணி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் நந்தினி, தரன், சூரியகுமார், இராஜவத்சலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜித்தன், தர்சன், துஷ்யந்தன், தாராங்கனி, ஜிவிதா, லஜிதா, நிலாஜிதா, திவாகர், தர்ஷிகா, சதீஸ், பிறீதா, டர்ஷன், மதுஷன், கஜந்தன், கஜேந்திரா, றஜீபா, கௌசிகன், சங்கீதா,. டென்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அபிநயன், தேனாஷ், அனுஷ்கா, யஷ்வந்த், திகாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41/22, செட்டியார் தோட்டம்,
நல்லூர்.

(8378)

தகவல்: குடும்பத்தினர்
செல்வராணி - 076 703 7231

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 கோவில் ஒழுங்கையில் அமைந்த 5446, 48,52,52/8 ஆகிய இலக்கங்கள் கொண்ட ஆதனங்களின் பெயர் மாற்றம் செய்வது தொடர்பான அறிவித்தல்.

மேற்படி ஆதன இலக்கங்களில் இல.46, இல.48, இல.52, இல.52/8 ஆகிய இலக்கங்களின் ஆதனப் பெயர் எமது ஆதனப் பதிவேட்டில் எம்.எம்.சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகின்றது.

ஆதன இலக்கம் 46 என குறிப்பிடப்பட்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4823ம் இலக்க 31.05.1997 திகதியிடப்பட்ட நன்கொடை உறுதிமூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேர்ச் லேனைச் சேர்ந்த வல்லிபுரம் தங்கவடிவேல் அவரது மகள் அதேயிடத்தைச் சேர்ந்த தங்கவடிவேல் மகள் கலா என்பவருக்கு நன்கொடை அளித்துள்ளார். இவ் ஆதனம் எனது மாதாவழி முதுசமும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுடையதென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்கு தடைகள் இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின்படி ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்று வெளிப்படுத்தி இந்த நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 5285ம் இலக்க 06.08.2000ம் திகதிய உறுதிமூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேர்ச் லேனைச் சேர்ந்த வல்லிபுரம் தங்கவேலும் பெண் கலாவும் ஆகிய இவர்கள் நாகராசா முத்துக்குமாரு பெண் மல்லிகாதேவி என்பவருக்குச் சீதனமாக வழங்கியுள்ளனர்.

ஆதன விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை "ஆயிலடி" நிலப்பரப்பு 0 குளி 12.90ம் வீடும் பயிர் வகைகளும் இது 1996.12.26ம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு.வ.சிவராசா அவர்களால் அளந்து வரைந்த 1618ம் இலக்க நில அளவைப் படத்தில் சுட்டிய 1ம் இலக்கத்துண்டும் குறித்த படத்தில் சுட்டிய 10ம் இலக்கத்துண்டில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் அப்பங்கை அனுபவிக்க குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்கத்துண்டான 10அடி அகலப் பாதையால் வாய்க்கால்வழி பாவிப்புரித்தும்

எல்லைகள்

வடக்கு: சேச் லேன்
கிழக்கு: குறித்த படத்தின் 2ம் இலக்க துண்டு
மேற்கு: இருதயமுத்து டெய்சியின் ஆதனம்
தெற்கு: குறித்த படத்தின் 6ம் இலக்க துண்டு இதடங்கலும்

தற்போது இவ் ஆதனத்தை நாகராசா முத்துக்குமாரு பெண் மல்லிகாதேவி என்பவர் தனது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

ஆதன இலக்கம் 48 என்ற ஆதனமானது ஆதனப்பதிவேட்டில் எம்.எம்.சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகிறது. இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4826ம் இலக்க 31.05.1997ம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதியின் மூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கனகரத்தினம் கைம்பெண் ஜெயமலர் என்பவர் அவரது மகள் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கனகரத்தினம் மகள் ஜெயரஞ்சினி என்பவருக்கு நன்கொடை உறுதிமூலம் வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் எனது பிதாவழி முதுசமும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுமாயுள்ள தென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்கு தடைகள் இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்றும் வெளிப்படுத்தி நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

இவ்வாதனமானது 9464 இலக்க 10.05.2006ம் திகதிய நன்கொடை உறுதிமூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை கனகரத்தினம் மகள் செல்வரஞ்சினி அல்லது ஜெயரஞ்சினி என்பவர் தனது மாதா கனகரத்தினம் கைம்பெண் ஜெயமலர் என்பவருக்கு நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

ஆதன விபரம் வருமாறு.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை "ஆயிலடி" நிலப்பரப்பு 0 குளி 12.30ம் வீடும் பயிர் வகைகளும் இது 26.12.1996ம் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா வ.சிவராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 1618ம் இலக்க படத்தில் சுட்டிய 6ம் இலக்க துண்டு ஆகும்.

எல்லைகள்:

வடக்கு:1618ம் இலக்க நில அளவைப் படத்தின் 1ம் 2ம் இலக்க துண்டுகள்
கிழக்கு: குறித்த படத்தின் 2ம் 3ம் இலக்க துண்டுகள்
மேற்கு: ஒழுங்கை
தெற்கு: குறித்த படத்தில் சுட்டிய 7ம் இலக்க துண்டும் இதனடங்கலும்

குறித்த படத்தில் சுட்டிய 10ம் இலக்க துண்டிற்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் அப்பங்கை அனுபவிக்க குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் அதன் கிழக்கே உள்ள கோவில் ஒழுங்கையால் சேச் லேன் காணிக்கு போக்குவரத்துச் செய்யும் உரித்தும்

தற்போது கனகரத்தினம் கைம்பெண் ஜெயமலர் என்பவர் தற்பொழுது இவ்வாதனத்தை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

இல.52 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எமது ஆதனவரி பதிவேட்டில் எம்.எம்.சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகிறது. இவ் ஆதனத்தை யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த செல்லையா கைம்பெண் பொன்னம்மா என்பவர் அவரது மகள் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த பரமு குணராசா பெண் கனகேஸ்வரிக்கு நன்கொடையளித்துள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் உறுதி இல.4829 இல் 31.05.1997 திகதியிடப்பட்ட நன்கொடை உறுதிமூலம் இவ்வாதனம் எனது மாதாவழி முதுசம் எனவும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுடையது எனவும் குறித்த ஆதனத்தில் 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்கு தடை இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின்படி ஆட்சி உரிமை பெற்றுள்ளேன் என வெளிப்படுத்தி நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை யாழ்ப்பாண மாநகர சபை 20ம் வட்டாரத்தில் கோவில் ஒழுங்கை 26/56ம் இலக்கத்தில் வரி மதிப்பு இலக்கம் கொண்ட ஆயிலடி நிலப்பரப்பு 5குளி 14.30 இது 1996.12.26ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா வ.சிவராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 1618ம் இலக்கப் படத்தில் சுட்டிய 1ம் 2ம் 3ம் 4ம் 5ம் 6ம் 7ம் 8ம் 9ம் 10ம் இலக்க துண்டுகள் இதில் குறித்த படத்தில் சுட்டிய 9ம் இலக்க துண்டு இதில் நிலப்பரப்பு 0 குளி 12.90ம் வீடும் பயிர்வகைகளும் குறித்த படத்தில் சுட்டிய 10ம் இலக்க துண்டுக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் அப்பங்கை அனுபவிக்க குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்
எல்லைகளாக:

வடக்கு: குறித்த படத்தில் சுட்டிய 3ம் 10ம் இலக்க துண்டுகள்
கிழக்கு: சின்னவி அருமைத்துரைக்கும் சுப்பிரமணியம் சந்திராவிற்கும் உரிய ஆதனங்கள்
மேற்கு: குறித்த படத்தில் சுட்டிய 8ம் இலக்கத் துண்டு
தெற்கு: சிவலிங்கம் பெண் சோதிமலரின் ஆதனம்.

இதனடங்கலும் குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்க துண்டான 10 அடி அகலப் பாதையால் அதன் கிழக்கே உள்ள கோயில் ஒழுங்கையால் (சேச் லேனால்) இக்காணிக்கு போக்குவரத்துச் செய்யும் உரித்தும்

தற்போது இவ் ஆதனப் பெயர் மாற்றத்திற்காக பரமு குணராசா பெண் கனகேஸ்வரி என்பவர் எமது ஆதனப்பதிவேட்டில் தனது ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

ஆதன இல 52/8 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் எம்.எம்.சுல்தான் அப்துல்காதர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் இல. 4827 31.05.1997ம் திகதி யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கந்தையா கைம்பெண் இராசமணி ஆகியவர் அவரது பேத்தி நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த கந்தசாமி மகள் குணதீஸ்வரி என்பவருக்கு நன்கொடை உறுதி வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் எனது மாதாவழி முதுசமும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுடையதென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களுக்கு மேலாக எதுவித தங்கு தடைகள் இன்றி ஆட்சியில் இருந்து இலங்கை ஆட்சி உரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்றும் வெளிப்படுத்தி நன்கொடை உறுதி முடித்துள்ளார்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு வி.மணிவண்ணன் முகதாவில் 617ம் இலக்க 15.02.2019ம் திகதிய அறுதி உறுதி மூலம் நாவாந்துறை இல.52/8 கோவில் வீதியைச் சேர்ந்த விக்ரர் பிறேம்குமாரும் பெண் குணதீஸ்வரியும் ஆகிய இவர்கள் சுப்பிரமணியம் உதயதாசும் பெண் விக்கினேஸ்வரியும் என்பவர்களுக்கு ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைத்துள்ளார்.

ஆதனவிபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று நாவாந்துறை இறை யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு , யாழ். மாநகர சபை கிராம அலுவலர் பிரிவு J/84 ஆயிலடி நிலப்பரப்பு 0 குளி 12.90ம் வீடும் பயிர்வகைகளும் இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் வ.சிவராசா அவர்களால் 1996.12.26ம் திகதி அளந்து வரைந்த 1618ம் இலக்க நில அளவைப் படத்தில் 7ம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டுள்ளது.

எல்லைகளாக:
வடக்கு: 1618ம் இலக்க படத்தின் 6ம் இலக்க துண்டு
கிழக்கு:1618ம் இலக்க படத்தின் 3ம் இலக்க துண்டு
மேற்கு: ஒழுங்கை
தெற்கு: குறித்த நில அளவைப்படத்தில் 8ம் இலக்கத் துண்டு
இதனடங்கலும் குறித்த படத்தில் 3ம் துண்டாக காட்டப்பட்ட 10 அடி அகலப் பாதையால் அதன் கிழக்கே உள்ள கோவில் ஒழுங்கைக்கு இக்காணியில் இருந்து போக்குவரத்து செய்யும் உரித்தும் இதற்கு சேர்ந்தவைகளும் இன்னும் குறித்த படத்தில் 10ம் துண்டாக காட்டப்பட்ட ஆதனத்திலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் 3ம் துண்டு பாதையால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

தற்போது இவ்வாதனத்தை சுப்பிரமணியம் உதயதாசும் பெண் விக்கினேஸ்வரியும் ஆகிய இவர்கள் தமது பெயரை எமது ஆதனப் பதிவேட்டின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வட்டாரம் 20 கோவில் ஒழுங்கை ஆதன இல.54 என்பது எமது ஆதனப் பதிவேட்டில் மொஹமட் மொஹிடீன் அப்துல்காதர் என்ற பெயரில் காணப்படுகிறது.

பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4824ம் இலக்க 31.05.1997 திகதியிடப்பட்ட நன்கொடை உறுதிமூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சேச் லேனைச் சேர்ந்த சின்னத்தம்பி பூலோகராசா என்பவர் தனது மனைவி பூலோகராசா பெண் புவனேஸ்வரி என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

இவ்வாதனம் எனது பிதாவழி முதுசமும் எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுரிமையுடைய தென்றும் குறித்த ஆதனத்தில் நான் இற்றைக்கு 10 வருடங்களுக்கு மேலாக தங்கு தடையற்ற ஆட்சியிலிருந்து இலங்கை ஆட்சியுரிமைச் சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் ஆட்சியுரிமை பெற்றுள்ளேன் என்றும் வெளிப்படுத்தி நன்கொடை உறுதிமூலம் எழுதிக் கொடுத்துள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு அ.இிராசரட்ணம் முகதாவில் உறுதி இல.8482 இல் 07.12.2011 திகதிய அறுதிஉறுதிமூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி பூலோகராசாவும் பெண் புவனேஸ்வரியும் என்பவர்கள் அவ்வூர் தம்பிராசா திருக்கேதீஸ்வரனும் பெண் ஜெகதீஸ்வரியும் என்பவருக்கு அறுதி உறுதி எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

ஆதன விபரம் வருமாறு,

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை (நாவாந்துறை இறை) ஆயிலடி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா 26.12.1996ம் திகதி அளந்து 1-10 துண்டுகளாகப் பிரிவிட்டு வரைந்த 1618ம் இலக்கப்படத்தின் படி துண்டு 4 என கட்டப்பட்ட பாகம் குளி 12.90ம் வீடும் பயிர் வகைகளும் மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும். இது மேலும் குறித்த படத்தில் துண்டு 10 எனச் சுட்டப்பட்ட பாகத்தில் உள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும் குறித்த படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட 10 அடி அகலப் பாதையில் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

எல்லைகள்:

கிழக்கு: ஒழுங்கை
வடக்கு: கோவில் ஒழுங்கை
மேற்கு: குறித்த படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட பாகம்
தெற்கு: குறித்த படத்தில் துண்டு 5 என சுட்டப்பட்ட பாகம்
இதனடங்கலும் இன்னும் குறித்த படத்தில் 3ம் இலக்கத் துண்டான 10 அடி அகலப் பாதையால் அதன் கிழக்கே உள்ள கோவில் ஒழுங்கையால் (சேச் லேனால்) இக்காணிக்கு போக்குவரத்து செய்யும் உரித்தும்
தற்போது தம்பிராசா திருக்கேதீஸ்வரனும் பெண் ஜெகதீஸ்வரியும் இவ் ஆதனத்தை தற்போது தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

எனவே மேற்குறிப்பிட்ட ஆதனங்களில் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனங்கள் மேலே விபரித்த ஆதனம் தொடர்பான விண்ணப்பதாரிகளின் பெயர்களிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனங்கள் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்,
கௌரவ முதல்வர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை.

(C-2865)

# தடுப்பூசி தொடர்பான திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கை வெளியீடு

## கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி

(கரணவாய் )

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலை மாணவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

வயது வேறுபாடுகள் மற்றும் மாணவர் தெரிவு தொடர்பாகக் காணப்பட்ட பல்வேறு குழப்ப நிலைகளின் பின்னர் திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

அந்த வகையில் 16 வயது தொடக்கம் 19 வயது வரை உள்ள மாணவர்களுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நாட்களிலும் நேர ஒழுங்கிலும் பாடசாலைகளில் பைசர் தடுப்பூசி ஏற்றப்படும்.

2021 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் பாடசாலை மூலம் தோற்றும் சகல மாணவர்களுக்கும் வயது வேறுபாடுகள் இன்றி பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பைசர் தடுப்பூசி ஏற்றப்படும்.

19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை இடை விலகியோர் மற்றும் பல்கலைக்கழகம் போன்ற வேறு நிறுவனங்களில் இணைந்து கொண்ட சகலருக்கும் பாடசாலைகளில் அல்லாமல் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 8.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை பைசர் தடுப்பூசி வழங்கப்படும். (வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளடக்கப்படுவார்கள்)

மேற்கூறிய வகையில் அல்லாமல் வேறு எந்த வகையிலும் உள்ள 19 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சினோபார்ம் தடுப்பூசியானது வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு தங்களது பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் தங்களது பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரையும் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (4-7-60)

## 'கிராமத்துடனான உரையாடல்' நிகழ்ச்சித்திட்டத்தில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் புறக்கணிப்பு

### சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அண்மையில் இடம்பெற்ற "கிராமத்துடனான உரையாடல்" என்ற அரசாங்கத்தின் அபிவிருத்தி சார்ந்த கலந்துரை யாடல்களுக்கு நகர பிதாவினை அழைக்கவில்லை என நகர சபை உறுப்பினர்கள் சபையில் கண்டனத் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே குறித்த கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த சபைத் தீர்மானத்தினை தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகரசபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் ஆலோசனைகள் இன்றி சபை எல்லைக்குள் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதால் குறித்த அபிவிருத்தி நூறு சதவீதம் பயனளிக்காமல் போய் விடும் எனவும் சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். (4-7-30)

## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணைய வழி அரங்க கதையாடல் 40 நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-7)

## இன்றும் எதிர்வரும் 31 ஆம் திகதியும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடலாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களின் நலன் கருதி இன்றும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையும் வர்த்தகர்களை வணிக நடவடிக்கையில் ஈடுபடுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதன்படி இன்று 24 ஆம் திகதி மற்றும் எதிர்வரும் 31 ஆம் திகதிகளில் வர்த்தகம் செய்ய விரும்பும் வர்த்தகர்கள் கடையைத் திறந்து தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். (4-7-18)

## விபத்து; முதியவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளம் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா தாண்டிக்குளம் ஏ9 வீதியில் சென்று கொண்டிருந்த துவிச்சக்கரவண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வவுனியா கணேசபுரத்தை சேர்ந்த 73 வயதுடைய முதியவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா போக்குவரத்து பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (4-7-299)

## கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துங்கள்

### விவசாயிகள் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுது மட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட வயல் நிலங்களில் கட்டாக்காலி மாடுகளால் பயிரழிவு ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

காலபோக நெற்பயிர்ச் செய்கையின் பொருட்டு 05/10/2021 தொடக்கம் 15/03/2022 வரை கால்நடைகளைக் கட்டுப்படுத்தி வளர்க்குமாறு கமக்கார அமைப்பு அறிவித்தல் விடுத்த போதிலும் சிலர் இது வரை கால்நடைகளை கட்டுப்படுத்தாமல் கட்டாக்காலிகளாக விட்டுள்ளனர்.

இதனால் எழுது மட்டுவாழ் தெற்கு ஒட்டுவெளி வயல் பகுதி உள்ளிட்ட இடங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-7-30)

## உயிரிழந்த இந்திய மீனவரின் சடலம் உறவுகளிடம் ஒப்படைப்பு



(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பரப்பில் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்த இந்திய மீனவரின் உடல் நேற்று காங்கேசன் துறை ஊடாக தமிழகம் அனுப்பி வைக்கப்பட்டது.

காரைநகர் கோவளம் பகுதிக்குள் கடந்த 18 ஆம் திகதி ஊடுருவிய இந்திய மீனவரின் படகு கடற்படையினரின் படகுடன் மோதியதில் இந்திய மீனவரின் படகு முழுமையாக கடலில் மூழ்கியது. இதன் போது இரு இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டபோதும் ஒருவர் காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் போன இந்திய மீனவரின் உடல் கடந்த 20 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் சடலமாக மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்டவரின் உடலே நேற்றைய தினம் உயிரிழந்தவரின் உறவுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-7-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 300 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 160 | 150 | 200 |
| தக்காளி | 160 | 150 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 150 | 140 | 180 | 200 |
| கரட் | 100 | 150 | 180 | 200 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 160 | 160 | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 130 | 200 |
| பாகற்காய் | 400 | 600 | 450 | 500 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 250 | 300 | 220 | 300 |
| லீக்ஸ், | 200 | 240 | 280 | 250 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 340 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 240 | 200 |
| போஞ்சி | 200 | 250 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 200 | 280 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 500 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 70 | 50-80 |
| இராசவள்ளி | -- | 320 | 260 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 80 | 20 | 30 |
| ஈரப்புலா | 60 | -- | -- | 120 |

# இராசிபலன்

**24.10.2021**
**ஐப்பசி 07, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தி பின்னிரவு 4.11 மணிவரை**
**ரோகிணி பின்னிரவு 12.23 மணிவரை**
**சுபநேரம் -9.02-10.32 மணிவரை**
**இராகு காலம்- 4.32- 6.02 மணிவரை**
**சந்திராஷ்டமம்- சுவாதி, விசாகம்**
**சங்கடகர சதுர்த்தி விரதம். வளவன்**


**மேஷம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


**ரிஷபம்**
தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம் பெறலாம், பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.


**மிதுனம்**
பக்குவமாகப் பேசி சாதித்துக் கொள்வீர்கள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


**கடகம்**
அதிஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.


**சிம்மம்**
வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.


**கன்னி**
நண்பர்களுக்குள் நிலவிய மனஸ்தாபங்கள் அகலும், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


**துலாம்**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.


**விருச்சிகம்**
பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் கூடும் நாள்.


**தனுசு**
இனத்தார் பகை மாறி எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலனில் உற்சாகம் பெருகும் நாள், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும் நாள்.


**மகரம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.



**கும்பம்**
பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழித் தகவல் நெஞ்சம் நெகிழ வைக்கும்.


**மீனம்**
பொது நல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், போசன சுகமுண்டு.

**உயர்ந்த மனிதன் வீணான சச்சரவுகளில் ஈடுபடமாட்டான்.**

# சீரற்ற காலநிலையால் வவுனியாவில் பத்து வீடுகள் சேதம்

## பயிர்ச் செய்கைகளும் அழிவு



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் பெய்த கடும்மழை மற்றும் காற்றினால் பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பயன் தரும் மரங்களும் அழிவடைந்துள்ளது.

இந்நிலையில் வவுனியா இராசேந்திரங்குளம், சூடு வெந்தபுலவு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் சில வீடுகளின் கூரைத்தகடுகள் காற்றினால் அடித்து செல்லப் பட்டுள்ளது.

இதேவேளை அர பாத் நகர் பகுதியில் வீசிய கடும்காற்றினால் செய்கை பண்ணப்பட்டிருந்த வாழை மற்றும் பப்பாசி போன்ற பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் தகவல்களை சேகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-299)

# நானாட்டன் பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்



(மன்னார்)

நானாட்டன் பிரதேச சபையின் ஸ்ரீலங்க சுகந்திர கட்சியின் உறுப்பினர் நாகூர் மீரா றாசிக் பரிது மரணம் அடைந்த நிலை யில் புதிய உறுப்பினராக முருங்கன் பகுதியை சேர்ந்த பெனடிற் யாக்கோப் பிள்ளை சட்டத்தரணி ம.றூபன்ராஜ் டபேறரா முன்னிலையில் ஒப்பமிட்டு பதவி பிரமாணம் செய்துள்ளார். (7-4-285)

# வவு.வடக்கில் 135 ஏக்கர் காணியினை விடுவிக்குமாறு வன வளத்துறை அமைச்சரிடம் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா வடக்கு, முத்துமாரி நகரில் 135 ஏக்கர் வயற் காணியை விடுவிக்குமாறு வன வளத்துறை அமைச்சரிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் கோரிக்கை முன் வைத்துள்ளார். பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வனவளத் துறை அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் வனவளத் துறை அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன வளத் திணைக்களத்தினர் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லைக் கற்களை பதிப்பதற்கு முன்னர், பிரதேச செயலாளர்களுக்கு தகவலை வழங்கி அவர்களது கருத்தை கேட்டறிந்து பிரதேச செயலக உத்தியோகத்தருடன் இணைந்தே எல்லைக் கற்களை பதிக்க வேண்டும் எனவும், இராணுவத்தினரோ அல்லது விசேட அதிரடிப்படையினரோ, காணிகள் அல்லது பற்றைகளை துப்பரவு செய்யும் பொது மக்களை கைது செய்தால், வன வளத் திணைக்களத்தினர் பிரதேச செயலாளர்களிடம் குறித்த இடம் தொடர்பாக கேட்டறிந்த பின்னரே நீதிமன்றத்திற்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தேன். அத்துடன், வவுனியா வடக்கு முத்துமாரி நகர் மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காக 135 ஏக்கர் வயற்காணி விடுவித்து தருமாறும், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காஞ்சூரமோட்டை மக்களுக்கு காணிவழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் கோரியிருந்தேன். இதன் போது, வனவளத்துறை அமைச்சர் எதிர்வரும் கிழமைகளில் குறித்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு அதற்கான தீர்வுகளை உடனடியாக வழங்குமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தார். இதன் மூலம் அம் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-4-250)

# மட்டக்களப்பு-ஏறாவூர் பகுதியில் பொது மகனை தாக்கிய பொலிஸ்

## பணி இடை நீக்கம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் பொதுமகன் இருவரை தாக்கும் வகையிலான காணொளி வெளியாகியது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை பதிவாகியுள்ளதாக தெரிய வருகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை போக்குவரத்து பொலிஸார் நிறுத்தியதாகவும், அதனை அவதானிக்காது குறித்த நபர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றதன் காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபரை பின் தொடர்ந்து வந்த பொலிஸ் அதிகாரி இடையில் மறித்து இரண்டு நபர்களில் ஒருவர் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தியுள்ளார். குறித்த தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரி நேற்றைய தினம் கைது செய்யப்பட்டதுடன் பணி இடைநீக்கமும் செய்யப்பட்டார். (7-4-285)

எகிறும் வாழ்க்கை செலவினங்கள்

# மக்கள் வீதிக்கு இறங்கி போராடினால்

# கலவரங்கள் வெடித்து இரத்த ஆறு ஓடும்

## முன்னாள் சபாநாயகர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**விவசாயிகளும் நாட்டுமக்களும் வீதிகளில் இறங்கிப்போராட ஆரம்பித்தால், பாரிய கலவரங்கள் வெடித்து இரத்த ஆறு ஓடக்கூடும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய எச்சரித்துள்ளார்.**



சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் கரு ஜயசூரியவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்வித்துறைசார் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்கு தீர்வு காணப்படும் என்று நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்தனர். சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பொறுமையுடன் செயற்பட்டிருந்தால் சுமார் இருவருடங்களின் பின்னர் மீண்டும் பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் தமக்குரிய சிறுவர் பராயத்தை அனுபவிப்பதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

இருப்பினும் தற்போது மாணவர்கள் மிகவும் துரதிஷ்டவசமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர்.

அதுமாத்திரமன்றி ஆசிரியர்கள் கடந்த காலங்களில் அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் அடக்கு முறைகளுக்கும் அவமதிப்புக்களுக்கும் இலக்காகினர். முதலில் நாட்டு மக்களின் உணர்வுகளை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அதுமாத்திரமன்றி மறுபுறம் இரசாயன உரத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், அதனால் மிகமோசமான பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இரசாயன உரத்திற்குப் பதிலாக சேதன உரத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு மிகவும் நேயமானதாக இருந்தாலும், உலகின் வேறெந்தவொரு நாடும் மிகக்குறுகிய காலத்திற்குள் உரவகையின் பயன்பாட்டை மாற்றியமைப்பதற்கு அழுத்தம் பிரயோகித்ததில்லை. அவ்வாறு மாற்றியமைப்பது நடைமுறையில் சாத்தியமான விடயமும் அல்ல.

மிகப் பாரியளவிலான சேதன உரப்பயன்பாட்டிற்கு மாறிய பூட்டான் கூட, அச்செயற்திட்டத்தில் வெற்றியடைவதற்கு எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுவரையில் காத்திருக்கின்றது.

இவையனைத்திற்கும் அப்பால் நாட்டுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளும் நாட்டு மக்களும் வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்தால், கலவரங்கள் கூட ஏற்படக் கூடும்.

அவ்வாறான நிலை தோற்றம் பெறுவதற்கு இடமளிக்க வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# சுகாதார வழிகாட்டல்களை மறந்து செயற்படும் மக்கள்

(கொழும்பு)

நாட்டில் கொவிட் நோய் அறிகுறிகள் அற்ற தொற்றாளர்கள் சமூகத்தில் அதிக அளவில் இருக்க கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர்களை அடையாளம்காண்பதற்காக பரவலான பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் செயலாளர் கமல் ஏ.பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது கொவிட் தொற்று தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுவரையில் கொவிட் தொற்றினை ஓரளவு கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எனினும் மக்கள் நோய் தொற்றினை மறந்து அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

சுகாதார வழிக்காட்டல்களை மக்கள் மறந்து செயற்படுவது சிறந்த நிலைமை அல்ல. இந்த நாட்டில் கொவிட் தொற்று முடிவுக்கு வந்து விட்டதாக நினைத்து மக்கள் செயற்படுகின்றனர்.

நாள் ஒன்றுக்கு 20 மரணங்கள் பதிவாகுவதென்பதனை சாதாரணமாக எண்ண கூடாது. மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக, டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 21,154 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. அதே வேளை 10 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதேவேளை பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலைச் சூழலில் டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென டெங்கு ஒழிப்பு பிரிவு வலியுறுத்தியுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

## உங்களைக் குறை கூறுகிறார்களா?

தங்களுடைய செயல்களில் யாரும் குறை காணக்கூடாது. மாறாக தங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையினையும் பாராட்ட வேண்டும் என்று தான் அனைவரும் விரும்புகிறார்கள்.

மலைபோல் குவிந்துள்ள குறைகளைக் குறைத்துக் கடுகளவும் இல்லாமல் செய்ய சிலருக்கு ஏன் மனம் வரமாட்டேன் என்கிறது?

ஒரு கோணத்தில், நம்மைப் பாராட்டுபவர்கள் நமக்குத் தீமையே செய்கிறார்கள். தீயவற்றிற்கும் சாதாரண சாதனைகளுக்கும் பாராட்டுக் கிடைக்கும் போது மேன்மேலும் செய்து நம் திறமைகளை நாமே மங்கச் செய்து கொள்கிறோம்.

குறை கூறுபவர்களுள் இரண்டு வகையினர். முதலாமவர் நமக்கு மிகவும் வேண்டியவர். இரண்டாம் வகையினர் நமக்கு வேண்டப்படாதவர்கள். அதாவது நம் மீது பொறாமை கொள்பவர்கள்.

நமக்கு வேண்டப்படாதவர்கள் குறை கூறினால் அவர்கள் சொன்னவற்றை முற்றிலும் புறக்கணித்துவிட்டு அவர்களோடு வம்புக்கு போவது முறையான செயலல்ல. மாறாக அவர்களது கூற்றில் எந்தளவுக்கு உண்மை உள்ளது என்று கண்டறிந்து அவற்றைத் திருத்திக் கொள்வதும் நம்மை நாமே உயர்த்திக் கொள்வதும் முன்னேற விரும்புபவர்களுக்கு உரிய தலையாய தகுதியாகும்.

நமக்கு வேண்டியவர்களே குறை கூறினால் அதில் சிறிதளவேனும் உண்மை இருக்கத் தான் செய்யும். இவர்களின் கேடு இல்லாத எண்ணம் நாம் நம் தவறை உணர வேண்டும் என்பதே.

பொதுவாக ஒருவரை எவரும் குறை கூறுவதற்கு முன்பே அவரது மனசாட்சி அவரை உறுத்தும். ஆனால் அவரது மனச்சாட்சியும் உணர இயலாத சில தவறுகள் நடந்து விடுவதுண்டு. அத்தகைய தவறுகளைச் சுட்டிக்காட்டுபவர்கள் நம் மனசாட்சி செய்யும் நன்மைக்கும் மேலாக நன்மை செய்பவர்கள்.

குற்றங்குறைகளை இந்தக் காதில் வாங்கி அந்தக் காது வழியாக விட்டுவிடுவதோ, போலிச் சமாதானங்களைக் கூறிச் சரிக்கட்டுவதோ நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

குறை கூறுவோரின் கூற்றுக்களை அக்கறையோடு கேட்டு அவற்றிற்கு பரிகாரம் தேடாமல் அவர்கள் மீது எரிந்து விழுந்தால், எக்கேடோ கெட்டுப் போகட்டும் நமக்கென்ன என்று எல்லோரும் ஒதுக்கி விடுவார்கள்.

அத்தகைய நிலைக்கு ஆளாகி விட்டவர்களின் வாழ்க்கை இழுப்பவர்கள் அற்ற தேர் போல் வாடிக்கையாளர்கள் அற்ற வங்கி போல் ஆகி விடும்.

நமக்கேன் வம்பு என்ற வகையில் நம்மைக் குறை கூறுபவர்களின் எண்ணிக்கை குறையக் கூடாது.

குறைகளைப் போக்கிக் கொள்வதிலேயே நம் மனம் விருப்பம் செலுத்துமானால் குறை கூறுபவர்களின் எண்ணிக்கை தானாகக் குறையும்.

**லேனா தமிழ்வாணன்**

மனிதனை உருவாக்குபவை மருந்தோ,
உணவோ அல்ல, இலக்கியங்கள் தாம்!
– ஜெயகாந்தன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூனியின் சூழ்ச்சியால் இராமர் மட்டுமல்ல பரதனும்...

சூழ்ச்சி என்ற சொல்லை அகராதியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஓர் அன்பர் கூறினார்.

சூழ்ச்சியை அகராதியில் இருந்து நீக்குவ தாயின், சூழ்ச்சி இல்லாமல் போகவேண்டும் என்றார் இன்னொருவர்.

ஆக, சூழ்ச்சி என்ற சொல்லுக்குள்ளேயே அதன் கொடுமையும் துரோகமும் வெளிக் கக்குகிறது.

தவிர, இதிகாசங்கள் பேசுகின்ற துன்ப துயரங்களுக்குப் பின்னால் சூழ்ச்சிகளே காரணமாக இருந்தன என்பதை அறிய முடி யும்.

அந்தவகையில், கம்பராமாயணத்தின் துயர்படலம் என்பது மந்தரை எனும் சகுனி யாளின் சூழ்ச்சியால் ஏற்பட்டதுதான்.

கைகேயியின் தோழியான மந்தரை இயல்பிலேயே கூன் முதுகை உடையவள்.

அவளின் கூன் முதுகு மீது சிறுவன் இரா மன் மண் உருண்டையால் எறிந்து விளை யாடியதன் காரணமாக, இராமன் மீது கடுங் கோபம் கொண்டிருந்த மந்தரை, இராமரின் பட்டாபிஷேகம் வரை காத்திருந்தாள்.

காலம் நெருங்கியது. தன் மூத்த மைந்தன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாக தசரதர் அறிவிக்க, அயோத்தி மாநகர் விழாக் கோலம் பூண்டது.

இராமருக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தி அயோத்தி மாநகர் கடந்தும் மகிழ்ச்சியை – எழுச்சியை ஏற்படுத்த, கூனி மட்டும் பட்டா பிஷேகத்தைத் தடுக்கச் சூழ்ச்சி செய்தாள்.

அவளின் சூழ்ச்சிக்கு கைகேயி இசைந் தாள்.

அந்தோ! இராமர் காடேகினார். தசரதரின் உயிர் பிரிந்தது.

இறந்த தன் தந்தையின் இறுதிச் சடங் கைச் செய்யும் உரிமையை உடைய இராம னால் அதனைச் செய்ய முடியாமல் போயிற்று.

தவிர, அவதாரபுருஷரை மகனாகப் பெற்ற தசரதனின் உயிரற்ற உடலுக்கு இராமன் அக் கினி ஏற்றுகின்ற பெரும் பேற்றை தசரதன் இழந்து போனான்.

இவையாவற்றுக்கும் மேலாக, எந்தக் குற்றமும் அறியாத பரதன் பழிச்சொல்லுக்கு ஆளாயினான்.

பரதன் தன் மகன் அல்ல என்று தந்தை தசரதன் நிராகரிக்கும் அளவுக்கு பரதனின் வாழ்வில் பெரும் அவலம் ஏற்பட்டது.

இங்குதான் மந்தரையின் சூழ்ச்சி இரா மனை மட்டுமல்ல பரதனையும் அதற்கப்பால் பலரையும் பெரும் துன்பத்துக்கு ஆளாக்கி யது.

இங்குதான் சூழ்ச்சியின் நச்சு வேர் எங் கும் படர்ந்து எவரையும் அழிக்கும் என்பது உணரப்படுகிறது.

இந்த அடிப்படையில்தான், தமிழக மீனவர் களுக்கும் எங்கள் கடற்றொழில் சகோதரர் களுக்குமிடையில் மோதலை உண்டு பண் ணும் சூழ்ச்சி செய்யப்பட்டுள்ளது.

அந்தச் சூழ்ச்சியின் பூர்வாங்கமே தமிழக மீனவச் சகோதரனின் இறப்பாகும்.

இனி, சூழ்ச்சி வீசப்போகும் நச்சுக்காற் றுக்கு யாரெல்லாம் அகப்படுவர் என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும்.

## நாட்டில் நேற்று மேலும் 553 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில்கொரோ னாத் தொற்று உறுதி யான மேலும் 553 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்து ள்ளது. இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்த ப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 535,528 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 18,845 பேர் சிகிச்சை நிலையங் களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## மந்துவில் மேற்கு பகுதியில் ஆபத்தான ஆயுதங்கள் மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் மேற்குப் பகுதியிலுள்ள பாழடைந்த வீடொன்றில் இருந்து வாள் உள்ளிட்ட ஆபத்தான ஆயுதங்கள் நேற்று வெள்ளிக்கி ழமை இரவு இராணுவ த்தினரால் மீட்கப்பட்டுள் ளது.

இராணுவப் புலனாய் வுப் பிரிவினருக்கு கிடை க்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இராணு வத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வாள் மற்றும் ஆபத்து விளைவிக்கக்கூடிய இரண்டு கைக் கோட ரிகள் ஆகியன மீட்கப்பட் டுள்ளன.

மீட்கப்பட்ட ஆயுதங் களை இராணுவத்தினர் பொலிஸாரிடம் ஒப்படை த்திருந்ததுடன் மேல திக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர். (ம- 3,30)

## முல்லைத்தீவு உடுப்புக்குளத்தில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு - உடுப் புக்குளம் பகுதியில் சட்ட விரோத நாட்டுத்துப்பாக் கியி[illegible] காணி க்கு கொண்டு சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக முல்லை த்தீவு பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு - றெட்பா னா பகுதியினை சேர்ந்த 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ள தாக தெரியவருகிறது. (ம-3)

## மருத்துவக் குறிப்பு

வல்லாரை இலையை வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வர இரண்டொரு தினங்களில் குடல் புண், குடல் நோய் குணமாகும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்க ளின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை 25 ஆம் திகதி திங்கட்கி ழமை காலை 8.30 மணி யிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதே சத்தில்** கூமாங்குளம், கிருஷ்ணா மெடி கிளி னிக், சமணங்குளம்ஆகிய பிரதேசங்களில் மின்சா ரம் தடைப்படும். (நி-4)

## கொரோனா தொற்றால் மேலும் 19 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற் றுக்குள்ளான மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோ னாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிர த்து 593 ஆக அதிகரித் துள்ளது.

உயிரிழந்தவர்களில் 10 பெண்களும் 9 ஆண் களும் உள்ளடங்குகி ன்றனர். (ம-3)

## இளம் குடும்பப் பெண் வவுனியாவில் கடத்தல்
### கணவன் பொலிஸில் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா, தேக்கவ த்தைப் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பா ட்டில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

வவுனியா, தேக்கவத் தைப் பகுதியைச் சேர்ந்த 19 வயது ஆண் ஒருவர் மல்லாவி பகுதியைச் சேர்ந்த 18 வயது பெண் ஒருவரை காதலித்து கட ந்த யூலை மாதம் வவு னியாவில் பதிவுத் திரு மணம் செய்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் குறித்த பெண் தங்கியிருந்த வவு னியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீட் டிற்கு வானில் வந்த நப ர்கள் வீட்டில் இருந்த வர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு குறித்த பெண்ணை கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொட ர்பில் வவுனியா பொலி ஸில் முறைபாடு செய்ய ப்பட்ட நிலையில் பொலி ஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடு த்துள்ளனர். (ம-3,250)

## பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)


உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார மத்திய நிலைய வர்த்தக சங்க த்தின் தலைவர் யூ. பி. ஏக்கநாயக்க தெரிவித் தார்.

பெரிய வெங்காய செய்கையில் ஈடுபட்டு வரும் மாத்தளை, அனு ராதபுரம், பொலன்னறு வை ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த விவ சாயிகள் தற்போது அறு வடை செய்யும் வெங் காயத்தை தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். 120 முதல் 140 வரை ஒரு கிலோ வெங்காயம் பொருளாதார மத்திய நிலையத்தில் விவசாயி களிடமிருந்து கொள்வ னவு செய்யப்பட்டு வரு கின்றன.

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தி ற்கான வரி அதிகரிக்க ப்பட்டுள்ளது. இறக்குமதி கட்டுப்பாடும் விதிக்கப்ப ட்டுள்ளது.

உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் விலை சந்தையில் அதிகரித்து ள்ளது. இம்முறை வெங் காய செய்கையில் ஈடு பட்டுள்ள விவசாயிகளு க்கு வெங்காய செய்கை யில் சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதோடு விலையும் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரி வித்தார். (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ சிறு பிள்ளையை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்கிறார்

❖ "நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிடமகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை"

❖ "இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்.

❖ "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல"

❖ நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், 'இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!'

❖ 'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக'

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2021-16.11.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து காரியத்தை முடிக்கும் கும்ப இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. தன, லாபாதிபதியான குரு பகவான் நீச்சம் பெற்று சனியோடு இணைந்து 'நீச்ச பங்க இராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும்.

### இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும்

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் பூமி வாங்கும் யோகம் வாய்க்கும். பாகப் பிரிவினைகளில் இருந்த தடை அகலும். பணப்பற்றாக் குறை நீங்கும்.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இந்த காலகட்டத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இராசி நாதனாகவும் சனி விளங்குவதால், ஆரோக்கியக் குறைபாடு வரலாம். குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகும். கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை. உத்தியோகத்தில் வரவேண்டிய முன்னேற்றம் தள்ளிப் போகும். கடன் சுமை கூடும்.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் உண்டு. தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்ய வாய்ப்புக் கிடைக்கும்.




**தனுசு-சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், லாபஸ்தானத்திற்கு வரும்பொழுது மிகுந்த நற்பலன்களை வழங்குவார். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். பாதியில் நின்ற கட்டடப் பணி தொடரும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம் திகதி, குருபகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். தன, லாபாதிபதியான குருபகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் போது தனவரவு தாராளமாக வந்துசேரும். தொழிலில் இலாபம் கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் அதிகமாக இருக்கும். இருப்பினும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. வீடு, இடம் வாங்கும் யோகம் வாய்க்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். வீட்டிற்குத் தேவ்வயான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். பொதுவாழ்வில் புதிய திருப்பம் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வு கிடைக்கலாம். இம்மாதம் வியாழக்கிழமைகளில் குருபகவானை வழிபடுங்கள்.



**நன்றி மறக்காத நல்ல உள்ளம் பெற்ற மீன இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் 'நீச்ச பங்க இராஜயோக' அமைப்பில் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

### ஆரோக்கியத்தில் கவனம் தேவை

சப்தம ஸ்தானத்தில் புதன் உச்சம் பெற்று, உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே பொருளாதார நிலை உயரும். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம் - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மறைவிடமான 8 இல் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைத்திருக்கும் பொழுது எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இந்த நேரத்தில் விழிப்புணர்ச்சியோடு செயற்படுங்கள்.

குடும்பத்தில் மருத்துவச்செலவு கூடும். சொத்துக்களாலும், சொந்தங்களாலும் பிரச்சினை வரலாம். நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றாக இருக்கும்.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் ஆவார்.

அவர் அஷ்டமத்தில் அடியெடுத்து




வைக்கும் பொழுது நற்பலன்கள் கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். தொழில் முன்னேற்றம் பெறும்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப, வரும் திடீர் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமையும்.

உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம் திகதி, குருபகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன் விளைவாகப் பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். தலைமைப் பொறுப்புகள் கூட சிலருக்கு வந்து சேரும். சென்ற சில மாதங்களாக ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட எடுத்த முயற்சி கைகூடும்.

**பெண்களுக்கான பலன்கள்**

பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பகையாக இருந்தவர்கள் உறவாக மாறுவர்.

கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களின் வேலை வாய்ப்பால் உதிரி வருமானமும் வரும்.

வீடு, இடம் வாங்கும் முயற்சி கைகூடும். உறவினர் வழியில் சுபச் செய்திகள் வந்தடையும். பணிபுரியும் பெண்கள் விருப்ப ஓய்வு பெற்று, சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

இம்மாதம் வியாழக்கிழமைகளில் சிவபெருமானை வழிபட்டு வாருங்கள்.

(முற்றும்)

## எலிக் காய்ச்...

கடந்த ஜூன் மாதம் முதல் கடந்த 20 ஆம் திகதி வரையான 04 மாதங்களிற்குள் இலங்கையில் எலிக் காய்ச்சல் காரணமாக 250 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களில் இருவர் உயிரிழந்திருக்கின்றனர்.

குறித்த 250 நோயாளர்களும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் மாவனெல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வட மாகாணத்...

மேலும் குழு மோதல்கள், தனிப்பட்ட தாக்குதல்கள் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாதவாறு அவற்றைச் சமூகத்திலிருந்து முற்றாக அகற்றிப் பாதுகாப்பான சூழல் உருவாக்கப்படும் என வடமாகாணத்தின் ஆளுநர் ஜீவன் தியாகராஜா உறுதியளித்தார்.

இதேவேளை பாதுகாப்பான சூழல், பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள், கொரோனாத் தொற்றுத் தொடர் நடவடிக்கை, பாடசாலைகளை மீள ஆரம்பித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சத்துணவு வழங்குகின்ற பொறிமுறை ஆகிய விடயங்கள் தொடர்பிலும் குறித்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (ம-3,18,33)

## 13ஐ அமுல்...

தமிழ்த் தேசிய கட்சிகளுக்கிடையில் நவம்பர் மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திப்பு ஒன்று நிகழவுள்ளதென தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி என்பன இதில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

13ஆம் திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக, அது ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே நடைமுறைப்படுத்துமாறு தமிழ் தேசிய பரப்பில் செயலாற்றும் அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைத்து இந்திய அரசாங்கத்திடம் கோருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று சனிக்கிழமை கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் இணையவழியான கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா மற்றும் நீதியரசர் விக்னேஸ்வரன் சார்பில் பேராசிரியர் சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு இது குறித்த முடிவை எடுத்துள்ளதாக ரெலோ ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்தார். (ம-3)

## அரிசி, பருப்பு...

தார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

என்னை நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலையைப் பார்த்துக் கொள்வதற்காக என்றால் அதற்கு நான் தேவையில்லை. அதைவிட மாற்றம் ஒன்றை கொண்டு வருவதற்காகவே விசேடமாக இந்த விவசாயத் துறை தொடர்பில் நான் வந்தது முதல் உரத்தை இலவசமாக வழங்கினேன்.

உண்மையில் விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவே இலவசமாக வழங்கப்பட்டது. அதேபோல் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரித்தோம் என்றார். (ம-3)

## பசுமை விவ...

உலகின் எந்தவொரு இரசாயன உரக் கம்பனிகளும் பல்வேறு சக்திகளைத் தூண்டிவிட்டு இடையூறுகளை ஏற்படுத்தினாலும் அஞ்சப் போவதில்லை. சரியான தீர்மானங்களை எடுப்பதற்காகவே மக்கள் என்னை நாட்டின் தலைவராகத் தெரிவு செய்துள்ளனர்.

உடபத்தாவ, புன்னெஹெபொல சேதன உர தயாரிப்பு மத்திய நிலையம் மற்றும் சேதன பயிர்ச்செய்கை என்பவை தொடர்பில் நேற்று சனிக்கிழமை கண்காணிப்பினை மேற்கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்காக, அரசியல் தலைவர்கள் எடுக்காத கடினமான தீர்மானங்களை எடுப்பதற்கு நான் தயார். அன்று யுத்தத்தை முன்னெடுக்க வேண்டாம் என்று பலர் கேட்டுக்கொண்டனர். ஆனாலும், 30 வருட யுத்தத்தை நிறைவு செய்ததுபோல் எந்தவிதத் தடைகள் ஏற்பட்டாலும், பசுமை விவசாயத்தை வெற்றி கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தமக்குத் தேவை வாக்குகள் அல்ல, பொதுமக்களுக்கு சரியானதைச் செய்வதாகும் என்றும் சரியானதைச் செய்வதற்காகப் பயப்படாது தீர்மானங்களை மேற்கொண்டு, மக்களின் தேவைகளை மாத்திரம் கண்டறிவதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உலகின் இரசாயன உர உற்பத்தி நிறுவனங்கள் பல்வேறு வகையில் தூண்டுதல்களை மேற்கொள்வதன் மூலம் தடைகளை மேற்கொண்டாலும், அவை எவற்றுக்கும் தாம் அஞ்சப் போவதில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, மக்கள் தம்மைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கே ஆகும் என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## கோவிட் தடுப்பூசி...

ஆராய வேண்டுமென கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில், சங்கத்தின் தலைவர் ஷாமன் ரஜிந்ரஜித் தெரிவித்துள்ளார். (ம-3)

## 50 பேருக்கு...

வழிபாட்டுத் தலங்களில் ஈடுபடுவது தொடர்பில் சுகாதார அமைச்சு வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன இந்த பணிப்புரைகளை வெளியிட்டுள்ளார்.

வழிபாட்டுத் தலங்களில் சமூக இடைவெளி குறைந்தபட்சம் ஒரு மீற்றர் அளவில் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## ஸ்கொட்லாந்து...

ஸ்கொட்லாந்துக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்த மாநாடு நவம்பர் மாதம் 12ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

கொப்-26 என்றழைக்கக் கூடிய இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வ அழைப்பிதழ் கடந்தஜூலைமாதம் ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. (ம-3)

## வடக்...

வர் உயிரிழந்துள்ளனர்.

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேசத்தினைச் சேர்ந்த 79 வயதுடைய வயோதிப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் வவுனியாவில் உயிரிழந்த 73 வயதுடையவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,30)

## பெற்றோலை...

சர் குறிப்பிட்டுள்ளார் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நலனை கருத்திற் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு என்று தெரிவித்துள்ளார். (ம-3)

## வெலிக்கடை...

15 கைதிகள் சிறைச்சாலை கூரை மீது ஏறியதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கைதிகள் அமைதியின்மையை ஏற்படுத்தியதுடன், ஏனைய கைதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதைத் தொடர்ந்து சிறைச்சாலை அதிகாரிகளை ஈடுபடுத்தி நேற்று நண்பகல் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1152
வெற்றி இலக்கங்கள்
கடகம் 6 9 9 9 3 9

மெகா பவர்
திகதி 23/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0912
X 03 26 31 58 74

மஹஜன சம்பத
திகதி 2021/10/23
சீட்டிழுப்பு இலக்கம் 4564
T 2 2 3 3 7 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2859
L 01 04 17 42

தன நிதானய
திகதி - 2021.10.23
சீட்டிழுப்பு இலக்கம் - 594
M 18 23 27 76

சீட்டிழுப்பு வாரம் 095
சீட்டிழுப்பு திகதி 23.10.2021
வெற்றி இலக்கங்கள் 01 25 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 100,000.00/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1367
சீட்டிழுப்பு திகதி: 23.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,871,566
வெற்றி இலக்கங்கள் 22 29 32 76 U

சனிதா
சீட்டிழுப்பு இல: 3702
சீட்டிழுப்பு திகதி: 23.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,535,851.00
வெற்றி இலக்கங்கள் 42626973 I

சுப்பர் ஜக்பொட் 2,569,367.20/=
திகதி: 23.10.2021
வெற்றி வாரம்: 3253
வெற்றி இலக்கங்கள் 16 17 37 43
கடகம்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1541
சீட்டிழுப்பு திகதி 23.10.2021
தினம் சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 67,013,559.20/=
T 33 51 60 70

சம்பத வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 453
திகதி 23.10.2021
P 01 61 63 1
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,201,732
தொ.பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் கணனி அனுபவம் உள்ள சிட்டை போடுபவர் உடன் தேவை.

(C-2868)

-077 748 8093

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 08 நாட்களே

## அமெரிக்க அதிஸ்ட விசா

ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நிங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

0768226244

ஏற்கனவே எனது நண்பன் குடும்பத்துடன் V2 Travels ஊடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் வாழ்கின்றான். அவன் சொல்லி இப்போ எங்களுக்கும் விசா கிடைத்துள்ளது. இப்போது நான் சொல்லி அடுத்த வருடம் எனது நண்பன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். V2 Travels ஊடாக பதிவது மிகவும் சாதகமானது.

(C-2833)

பிரணவனி குடும்பம் அமெரிக்கா விசா வெற்றியாளர்

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

- Navi (Honda) வெள்ளை
- Passion Plus (Hero Honda) சிவப்பு

ஆகியன விற்பனைக்குண்டு.

(8377)

077 548 8044

## வீடு விற்பனைக்கு

யாழ். செம்மணி வீதி, நாயன்மார்கட்டில் 2 1/2 பரப்பு வருமானம் தரக்கூடிய காணியில் 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
( தரகர்கள் தேவையில்லை. )

(8372)

077 177 3789
075 983 3290

## விற்பனைக்கு

உணவகம் ஒன்றிற்குரிய கொட்கபேட் (சாப்பாடு சூடாக்கி - 6 அடி நீளம் 10 டிஸ்) மற்றும் கடைப் பெயர் பலகைகள் ( போட்டுக்கள்) விற்பனைக்கு உண்டு.

(8374)

077 441 0919

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம். 1992 இல் பிறந்த பரணி 1/4 கிரக பாவம் ஆசிரியை மணமகளுக்கு ஆசிரியர் அல்லது அரச திணைக்கள உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை.

077 864 9878
076 844 9056

(8361)

## காணி விற்பனைக்கு

கந்தரோடை ஆலடிப் பிள்ளையாருக்கு அருகாமையில் பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் இல் 26 பரப்பு காணி பகுதியாகவோ முழுமையாகவோ விற்பனைக்கு உண்டு.

(8347)

077 711 3559

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2831)

0768226240 DHL

## நிரந்தர வேலை வாய்ப்பு

வட மாகாணத்தில் நிலவியுள்ள அசாதாரண நிலைமையை கருத்தில் கொண்டு (lock down) வேலை வாய்ப்பினை இழந்தோருக்கும் புதிதாக வேலை வாய்ப்பினை தேடிக்கொண்டிருப்போருக்கும் எமது World Enterpreneurs நிறுவனத்தில் புதிய பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

உதவி முகாமையாளர், முகாமையாளர், அலுவலக மேற்பார்வையாளர், களஞ்சிய பாதுகாவலர், எழுதுனர் ஆகிய பதவிக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாகாணங்களில் புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(8376)

தொடர்புகளுக்கு 077 062 1631
077 985 8580

## உடனடி வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புனர்களுக்கான (ஆண்கள்) வெற்றிடம் உள்ளது. ஆர்வமுள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும். அத்துடன் தங்கிநின்று சகல வேலைகளும் செய்யக்கூடிய கூலியாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(8360)

இடம்:- இல. 303, A9 வீதி, கிளிநொச்சி
(பொலிஸ் நிலையம் அருகாமை)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-2836)


VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777


# மரண அறிவித்தல்



தோற்றம்
12 - 12 - 1957

மறைவு
23 - 10 - 2021

## கதிரமலை சந்திரகுமாரன்

புதுவளவு நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த கதிரமலை சந்திரகுமாரன் நேற்று (23.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் லயன். கதிரமலை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் - திரவியநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சித்திராவின் பாசமிகு கணவரும் ஹரிகிருஷ்ணியின் (மாணவி - யா/நெல்லியடி மத்திய கல்லூரி) பாசமிகு தந்தையாரும் சூரியகுமாரன், காலஞ்சென்ற புஸ்பலோசனி, உதயகுமாரன் (லண்டன்), நந்தகுமாரன் (லண்டன்), மீனலோசனி (லண்டன்) ஆகியோரின் அன்புநிறை சகோதரனும் சாந்தினி, சிவானந்தன் (லண்டன்), சரஸ்வதி (லண்டன்), யசோதா (லண்டன்), சிறிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை புதுவளவு, நெல்லியடியில் உள்ள பிறந்தகத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2870)

புதுவளவு,
நெல்லியடி, கரவெட்டி.

தகவல் :-
லயன். பொ. கதிரமலை

உ
குகமயம்

# நனி நன்றி

முருகன் பணியே முதற் பணியென,
முழுவாழ்வும் ஈந்த எம்தந்தை, கந்தனடியில்,
குகபதம் அடைந்த வேளை வருகை தந்து, துயர் துடைத்து,
ஆறுதல்கூறித் தேற்றிய, அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும்
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தெரிவித்தவர்களுக்கும்,
இணையங்கள், ஊடகங்கள் வாயிலாகவும் இதய அஞ்சலி
தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு உதவிகளை உணர்வுடன்
ஆற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை வழிநடத்திய பெருமக்களுக்கும்,
ஆறுதல் கூறி அஞ்சலி தெரிவித்த சிவாச்சாரியார்களுக்கும்,
இறுதி ஊர்வலத்திலும், தகனக்கிரியையிலும்
கலந்துகொண்டஅன்பர்களுக்கும் நண்பர்களுக்கும்
இறுதி ஊர்வலத்தின் போது காத்திரமானபணியாற்றிய
**யாழ் மாநகரசபையினருக்கும்...**
"உங்களது மாசற்ற அன்பையும், சேவையினையும், பங்களிப்பினையும்
நீளநினைந்து, நவில்கின்றோம்"
நனி நன்றி.
முருகா சரணம்!

**குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,**
மாப்பாணர் வளவு – நல்லூர் – யாழ்ப்பாணம்
24.10.2021

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 315

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 24.10.2021 | தொலைபேசி : 021 222 3378






உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர ஏனைய அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

சைவப்புலவர் கலாபூஷணம் செல்லத்துரை அவர்கள் காலமாகி விட்டார்.

சைவத்தமிழ்ப் பாரம்பரியத்துடன் வாழ்ந்த சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து பெரும் சேவையாற்றியதுடன் சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அதுசரி, கங்காணியாரை இன்னும் காணவில்லை. என்ன சங்கதியோ தெரியல்ல. மூப்பர் குரல் கொடுக்க, அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயனும் ஆலடிக்கு வந்துசேர சரியாக இருந்தது.

சாத்திரியார்: கங்காணியாருக்கு ஆயுள் நூறு.

கங்காணி: அப்படி நூறுவயது வரைக்கும் இருக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. இருக்கும் வரைக்கும் ஆரோக்கியமாக இருந்தால் அது போதும்.

மூப்பர்: அதுசரி கங்காணியார் என்ன களைச்சுப் போயிருக்கிறியள்.

கங்காணி: அதை யேன் கேட்கிறியள். அனைத்து ஆரம்பப் பாடசாலைகளும் நாளை திங்கட்கிழமை நடைபெறும் எண்டு அரசாங்கம் அறிவித்துப் போட்டுது. திடீரென்று அறிவித்ததால ஒரே அமர்க்களம். பேரப்பிள்ளைகளின்ர பாடசாலைச் சீருடை ஒண்டும் அளவில்ல. மூன்று மாதம் வீட்டிற்குள்ள இருந்ததால மாணவர்களின்ர உடம்புகள் பருத்தல்லோ விட்டுது. அதால அந்தச் சீருடைகள் அளவில்லாமல் போக இப்ப ரெயிலரிட்ட போய் புதுச்சீருடை தைக்கக் கொடுத்திட்டு வாறன்.

விதானையார்: கங்காணியார் எதிர்கொண்டுள்ள பிரச்சினை எல்லா இடத்திலும் ஏற்பட்டிருக்குது.

சிறாப்பர்: அப்ப மாணவர்கள் உடனடியாகச் சீருடை அணிய வேண்டுமெனக் கட்டாயப்படுத்தாமல் ஒரு தளர்வு நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

வாத்தியார்: அதுமட்டுமல்ல, மிக நீண்டகாலம் மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் வீடுகளில நிண்டதால, அவையளுக்குப் பாடசாலைக்கு வர சற்றுத் தயக்கமாக இருக்கும். எனவே மாணவர்களை முதலில பாடசாலைக்கு வரவழைக்க மகிழ்ச்சிகரமான வரவேற்பு இல்லை எண்டால் இந்தக் காலப்பகுதியில மாணவர் இடைவிலகலுக்கு நிறையச் சந்தர்ப்பம் ஏற்படும்.

இவ்வாறு வாத்தியார் கூற, கங்காணி கார்த்திகேயன் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார். இதனை அவதானித்த விதானையார், என்ன கங்காணியார் கடும் யோசனையில இருக்கிறியள் போல...

கங்காணி; என்ன செய்யிறது. எல்லாப் பொருட்களின்ர விலைகளும் கண்டபாட்டில ஏறிவிட்டுது. ஆனால் பென்சன் மட்டும் அதே அளவில தான் இருக்குது. இனி எப்படித்தான் சீவியம் நடத்தப் போறம் எண்டு தான் யோசனையாயிருக்கு.

சிறாப்பர்: பொருட்களின்ர விலை கண்டபாட்டில ஏறினால் நாட்டில் வறுமை தலைவிரித்தாடும், பஞ்சம் கோலோச்சும். களவும் கொள்ளையும் கண்டபாட்டில நடக்கும்.

விதானையார்: உண்மைதான். இனி இந்த நாட்டில சீவியம் நடத்த முடியாமல் போகும் என்பதுதான் உண்மை.



## வாள்வெட்டுக் குழுவை இல்லாமல் செய்ய முடியுமா?

போதாக்குறைக்கு உரவகைகளைத் தடை செய்துவிட, விவசாயமும் மந்தமடையப் போகுது.

மூப்பர்: அதுமட்டுமல்ல விதானையார், அரசாங்கத்திற்கு குடை பிடிக்கிறது மாதிரியல்லோ மழையும் எடுத்த எடுப்பில கொட்டித் தீர்க்க, நெல் விதைப்பும் சாத்தியப்படாது போல இருக்குது.

பண்டிதர்: அதுசரி சாத்திரியார் இந்த வருச மழை பற்றி பஞ்சாங்கம் என்ன சொல்லுது.

சாத்திரியார்: எங்கட பஞ்சாங்கங்களும் தமிழ் அரசியல்வாதிகள் மாதிரி ஒற்றுமையில்லாமல் தங்கட பாட்டில இயங்குகினம். ஒண்டு மழை எண்டும், மற்றையது கடும் வரட்சி எண்டும். இப்ப பஞ்சாங்கப் பலனில வேலையில்ல எண்ட மாதிரி நிலைமை வந்திட்டுது.

மூப்பர்: அதுசரி வாத்தியார் வடக்கின்ர புதிய ஆளுநர் தொடர்பில ஆலடி மௌனமாக இருக்கிற மாதிரித் தெரியுது.

வாத்தியார்: ஆளுநர் பதவியை ஜீவன் தியாகராஜா அவர்கள் இப்பதானே பொறுப்பேற்றிருக்கிறார். ஆனாலும் அவர் கூட்டமைப்போட, நீதியரசர் விக்னேஸ்வரனோட சந்திப்புக்களை சம்பிரதாயமாக மேற்கொண்டிருக்கிறார்.

அதுதவிர, வாள்வெட்டுக்குழுக்களைக் கட்டுப்படுத்துறதுதான் தன்ர முதல் வேலை எண்டு சொன்னவர். வடக்கில தமிழ் இளைஞர்- யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெண்டும் கூறியிருக்கிறார். அந்தவகையில அவரின்ர முயற்சிகள் நல்லதாக இருக்குது. அவருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேணும் என்பதைத்தான் நான் சொல்லுறன்.

விதானையார்: புதிய ஆளுநர் கூறின விடயங்கள் மிகவும் முக்கியமானவை என்பது உண்மைதான். ஆனால் வாள்வெட்டுக்குழுவை இல்லாமல் செய்யிறது மட்டும் நடக்கப்போகிற காரியமில்லை என்பதை நான் அறுதியிட்டுச் சொல்லுவன்.

சிறாப்பர்: என்ன விதானையார் இப்படிச் சொல்லிப் போட்டியள்.


விதானையார்: பின்ன, வடக்கில இருக்கிற படைத்தரப்பு நினைத்தால் அல்லாமல் வாள்வெட்டுக்குழுவை இல்லாமல் செய்ய முடியாது பாருங்கோ.

இவ்வாறு விதானையார் சொல்ல, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழக மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து போராட்டம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?

> “முள்ளிவாய்க்காலில் தமிழினத்தை கொத்துக் கொத்தாய்க் கொன்றொழித்த பெரும்பான்மை எமக்காக அகிம்சை வழியில் போரிட்டு தங்கள் உடலையே தீயிட்டு ஆகுதியாக்கிய தொப்புள் கொடி உறவுகளுடன் முட்டி மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றார்கள்.”



ஒவ்வொரு தாக்கத்திற்கும் அதற்கு இணையான மறு தாக்கம் உண்டு என்பது நியூட்டனின் விதி.

இவ்விதி விஞ்ஞானத்திற்கு மட்டும் பொருந்துவதாய் அமையும் என யார் வாதாடினாலும், அல்ல மனித வாழ்வியலிலும் இவ்விதி தாக்கம் செலுத்தும் எனலாம்.

நாம் ஒரு விடயத்தை செய்தோமானால் அதற்குப் பதிலீடு நமக்குக் கிடைத்தே தீரும். இதையே சைவசமயம் “வினை” என வகுத்திருக்கிறது.

இந்த “வினை” என்பதில் அரசனும் ஒன்றுதான், ஆண்டியும் ஒன்றுதான்.

இதை நாட்டில் நடைபெற்ற சமீபத்திய பல விடயங்கள் புரிய வைத்திருக்கின்றன.

ஆம், 2009 இல் தமிழினம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தது என்பதிலும் கொத்துக் கொத்தாய் இறந்து மடிந்ததை உலகமே வேடிக்கை பார்த்தது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

உலக வல்லரசுகளையே அதட்டும் அமெரிக்காகூட இந்த விடயத்தில் மௌனம் காத்தது. அமெரிக்காவின் இந்த மௌனத்திற்கு இந்தியாவும் ஒரு காரணம் என்பதை இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்த விடுதலைப் புலிகளை பூண்டோடு அழிக்க வேண்டும் எனக் கருதிய காங்கிரஸ் அரசு தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதை பொருட்டாக எடுக்கவில்லை.

வஞ்சம் தீர்க்கும் படலத்தை எப்பேற்பட்டாவது நிறைவேற்ற வேண்டும் என பிடிவாதமாய் இருக்க, முள்ளி வாய்க்காலில் இரத்த ஆறு ஓடி முடிந்தது. அதன் பின்னராவது தமிழினத்திற்கு மீட்சி கிடைக்குமா? என்றால் அதுதான் இல்லை என்றாகிவிட்டது.

முட்கம்பி வேலிக்குள் அடைபட்ட தமிழினம் விட்ட பெருமூச்சு கொஞ்ச நஞ்ச வெப்பத்தை வெளியேற்றவில்லை.

அமெரிக்காவால் ஜப்பான், கிரோசிமா நாகசாசியில் போட்ட அணுகுண்டு வெளியிட்ட வெம்மையை விட பத்து மடங்கு அதிக வெம்மை தமிழினத்தின் பெருமூச்சாய் அமைந்தது.

அதன் விளைவை இப்போது சம்பந்தப்பட்டவர்கள் அனுபவிக்கின்றனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

தமிழின அழிப்பிற்கு இந்தியாவின் வகிபங்கு இருப்பினும் தமிழகத்தில் தமிழினத்திற்கான ஆதரவுக் குரல்கள் எழுந்த வண்ணமே இருந்தன என்பதை நாம் நன்றியோடு பார்க்கவேண்டும்.

ஆம், தமிழினத்தை அழிப்பதை நிறுத்தி உடன் காப்பாற்றும்படி தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடந்தேறின. அவை எவையும் இந்திய மத்திய அரசின் பழிவாங்கும் படலத்தினுள் எடுபடவில்லை.

இதேவேளை தமிழினத்தை காப்பாற்றக்கோரி தமிழகத்தில் பல தோழர்கள் தம்மைத் தாமே தீமூட்டி சாம்பலாகிப் போன வரலாறுகளை நாம் இங்கு ஈண்டு கவனிக்கவேண்டும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், இந்திய தமிழக மீனவர்கள் வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து எமது கடல்வளத்தை அழிப்பதாகவும் மடிவலை போன்ற தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை மேற்கொள்வதனால் எமது கடல்வளம் பாதிக் கப்படுவதுடன் பல இலட்சம் பெறுமதியான வலைகளும் அழிக்கப்படுவதாகவும் தொடர்ந்து குரல்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

இது விடயத்தில் இலங்கை- இந்திய அரசுகள் முறையான நடவடிக்கைகளை எடுக்காமல் விடுத்ததன் விளைவு தமிழக மீனவர்களுடன் வடக்கு மீனவர்கள் முறுகல் நிலை வலுவடையச் செய்தது. இவ்வாறு மீனவர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்ட பின்னரும் இரு நாடுகளும் வேடிக்கை பார்க்கும் நிலையிலேயே இருந்தன.

முறுகல் நிலை உச்சம் பெற்று கைகலப்புக்கள் நடைபெறும் அளவிற்கு நிலை மோசமானது.

அந்த வேளையிலும் இரு நாடுகளும் இவ்விடயத்திற்கு தீர்வுகாண முற்படவில்லை என்பதற்குள் இருக்கும் அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழக- வடக்கு மீனவர்களின் முரண்பாடு இவ்வாறு நீண்டு செல்லும் நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழக மீனவர்களின் அத்துமீறலையும் எமது கடல் வளத்தைப் பாதிக்கும் செயற்பாட்டையும் கண்டித்து முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரை கடல்வழியூடாக படகில் பயணம் செய்து எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மீனவர்களுடன் இணைந்து நடத்தியிருந்தது.

இவ் எதிர்ப்பு போராட்டம் குறிப்பிட்டளவு வெற்றி பெற்றதை அங்கு வந்திருந்த படகுகள் சாட்சி சொல்லியிருந்தன.

தமிழினத்திற்காக குரல் கொடுக்கும் தமிழகத்திற்கு எதிராக தமிழ்மக்கள் போராட்டம் மேற்கொள்வதென்பது இலங்கை அரசுக்கு திருப்தி தரும் செயல் என்பதை இங்கு நாம் புரிந்து கொ ள்ளவேண்டும்.

அத்துடன் இவ் ஆர்ப்பாட்டம் தமிழகத்தில் எப்பேற்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

என்னதான் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் சரியான காரணங்களைக் கூறியிருந்தாலும் இவ்விடயம் திரிவுபடுவதை தவிர்த்துவிட முடியாது.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளினூடே எமது கடல் வளம் பாதிக்கப்படுகின்றன என்பதையும் தாண்டி இவ் ஆர்ப்பாட்டம் தமிழக மீனவர்களுக்கு எதிரானது எனும் திரிபுகளை சரிசெய்து, சரியான விடயத்தை தமிழக மக்களிடத்தே கூறுவது அவ்வளவு சுலபமான விடயமல்ல.

எமது கடல் வளங்கள் பாதிக்கப்படுகின்றன என்பது உண்மையானது. அதற்கு மறு பேச்சிற்கு இடமில்லை.

ஆயினும் இவ்வாறான போராட்டங்களை மேற்கொள்ளும் போது மிகவும் அவதானமாக மேற்கொள்வது காலத்தின் தேவையாகும்.

மீனவர்களின் பிரச்சினையை அரசியல் என்ற வட்டத்திற்குள் கொண்டு வருவது எமது தொப்புள்கொடி உறவுகளுடனான உறவைத் துண்டிக்க வழிவகுக்கும்.

ஆக, விடுதலைப்புலிகளைப் பழிவாங்குவதற்காக தமிழினம் அழியும் போது வேடிக்கை பார்த்த இந்திய மத்திய அரசைக்கண்டித்து எதிர்ப்புப் போராட்டம் நடத்திய தமிழக உறவுகளையும்;

முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாய்க் கொன்றொழித்த பெரும்பான்மை எமக்காக அகிம்சை வழியில் போரிட்டு தங்கள் உடலையே தீயிட்டு ஆகுதியாக்கிய தொப்புள் கொடி உறவுகளுடன் முட்டி மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர் என்பதை தமிழினம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

**அபிமன்யு**




## காகமும் எலியும்



அதைக் கேட்ட காகமும் எலியும் பாம்பின் யோசனையை வரவேற்றதுடன் அதனை வெகுவாகப் பாராட்டவும் செய்தன.

பாம்பு காகத்தின் கூட்டுக்கு தானியங்களைக் கவ்வியபடி சென்றது. அங்கே கூட்டில் காகத்தின் குஞ்சுகள் தாயின் வருகைக்காகப் பசியுடன் காத்திருந்தன.

பாம்பு தானியத்தைக் கூட்டில் வைத்துவிட்டுக் காகக் குஞ்சுகளை உண்ணத் தொடங்கியது. எல்லாக் குஞ்சுகளையும் தின்ற போதும் அதன் வயிறு நிரம்பவில்லை.

திரும்பிவந்து எலியின் வளைக்குத் தானியங்களை எடுத்துச் சென்றது. அங்கு எலிக் குஞ்சுகள் தாயின் வருகைக்காகக் காத்திருந்தன; வளையில் தானியத்தை வைத்துவிட்டு அங்கிருந்த எலிக்குஞ்சுகள் அனைத்தையும் பாம்பு தின்றது. வயிறு நிரம்பிய பாம்பு, அதன் வீடு திரும்பியது.


எலியும் காகமும் மிகுதித் தானியங்களை எடுத்துச் செல்லப் பாம்பு வரும் என வெகு நேரம் காத்திருந்தன. பாம்பு வரவேயில்லை.

சந்தேகம் தோன்றத் தமது வீட்டுக்கு விரைந்து சென்றன.

அங்கே தமது குழந்தைகளைக் காணாது பேரதிர்ச்சியடைந்தன, தாம் பாம்பினால் வஞ்சிக்கப்பட்டுவிட்டதை உணர்ந்து பெருந்துயர் அடைந்தன. (முற்றும்)

# மகாபாரதம்

**வியாசருக்கும் ஒரு புழுவிற்கும் நடந்த உரையாடல்**




தருமர் பீஷ்மரிடம் “போரில் இறக்க மனமில்லாதவரும், மனம் உள்ளவர்களும் கொல்லப்பட்டனரே! செல்வம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இன்பமிருந்தாலும், துன்பம் இருந்தாலும், எந்த நிலையிலும் எந்த ஜீவனும் உயிர் விடத் துணியவில்லையே! எல்லாம் ஆசையோடு வாழவே விரும்பு கின்றனவே ஏன்? அதன் காரணத்தைக் கூறுவீராக” என்று கேட்க பீஷ்மர் கூறலானார்.

“தருமா... நல்ல கேள்வி கேட்டாய். இது தொடர்பாக வியாசருக்கும், ஒரு புழுவிற்கும் நடந்த உரையாடலை உனக்கு நினைவுபடுத்துகிறேன்.

ஒரு நாள் பாதையில் விரைவாக ஓடும் புழுவைப் பார்த்த வியாசர்..“புழுவே..நீ பயந்தவன் போல இருக்கிறாய். வேகமாகப் போகிறாய்.

உன் இருப்பிடம் எங்கே இருக்கிறது. யாரைக் கண்டு பயப்படுகிறாய்? சொல்” என்று வினவினார்.

அதற்குப் புழு, “பாதைகளில் இரைச்சலுடன் செல்லும் வண்டிகளின் சப்தத்தைக் கேட்டு எனக்கு பயம் உண்டாயிற்று. அது என்னைக் கொன்றுவிடும் என பயந்து விலகிச் செல்கிறேன். அதிக சுமையை இழுத்துக் கொண்டு சாட்டையால் அடி பட்டுப் பெருமூச்சு விட்டுத் துன்புறும் எருதுகளின் ஓசையையும் நான் உணர்கிறேன்.

வண்டிகளை ஓட்டுவோர் ஒலியும் கேட்க முடிகிறது. என் போன்ற புழுப் பிறப்பினர் அதைத் தாங்க முடியாது. அந்தப் பயத்தால் விலகிப் போகிறேன். யாருக்குத்தான் உயிரை விட மனம் வரும்” என பதில் அளித்தது.

அந்தப் புழு அவ்வாறு கூறியதும் வியாசர் அதைப் பார்த்து “புழுவே... உனக்கு ஏது இன்பம்?விலங்கு பிறப் பாகிய உனது மர ணமே இன்பம் பயக்கும் என நினைக்கிறேன்”என்றார்.

(தொடரும்)




தனக்குத்தான் எல்லாம் தெரியும் என மற்றவர்களைப் பேசவிடாது தான் மட்டும் பேசிக் கொண்டே இருப்பவர்கள் பற்றி?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஏய் வியாசரே சும்மா கத்தாமல் கம் முன்னு வாய மூடிட்டு இருக்கனும்?**

ஓ...வாயை மூடிட்டு இருக்கணுமா? மக்கள் நலனில் அக்கறை கொள்ளாமல் விலைவாசியை உயர்த்துபவரை நிறுத்தச் சொல்லும், நான் மூடிக் கொண்டிருக்கிறேன்.
கொரோனாவின் கோரத்திற்குள்ளும் காணி பிடித்து தன் இனப் பரம்பலுக்கு வித்திடுபவர்களை நிறுத்தச் சொல்லும், நான் மூடிக் கொண்டிருக்கிறேன்.
பயங்கரவாதத்தை பூண்டோடு அழித்து விட்டோம் என அறிவித்து 12 வருடங்கள் கடந்த பின்னும் பயங்கரவாதம் இருக்கிறது என கதை விடுபவர்களை நிறுத்தச் சொல்லும், நான் மூடிக் கொண்டிருக்கிறேன்.
முடியுமா? முடிந்தால் அவர்களை நிறுத்தச் சொல்லும், அதன்பின் நான் நிறுத்துகிறேன்.

**தருஷ் — வதிரி**

**உலகக் கிண்ண பயிற்சி ஆட்டங்களில் இலங்கை அணி அபாரமாக விளையாடுகிறதே. கிண்ணம் வெல்ல வாய்ப்பிருக்கிறதா வியாசரே?**

இருபது-20 போட்டிகளைப் பொறுத்தவரை உறுதியாக எதையும் கூறிவிட முடியாது.
ஏனெனில் ஒன்று இரண்டு பந்துகளே போட்டியின் நிலையை மாற்றக் கூடிய திரில் இருபது-20 இல் தான் இருக்கிறது.
இலங்கை அணியின் தற்போதைய செயற்பாடு மிகவும் திருப்திகரமாக உள்ளது.
அத்துடன் மிகச் சிறந்த பயிற்சியாளர் மஹேல ஜெயவர்த்தன இலங்கை அணிக்கு ஆலோசகராக உள்ளார்.
அவரின் ஆலோசனை நிச்சயம் அணியை கட்டமைக்கும் என்பது மறுக்க முடியாதது.
பொறுத்திருந்து பார்ப்போம். மீண்டும் ஒருமுறை கிண்ணம் வெல்லுமா இலங்கை அணி என்பதை.

**சாருக் — யாழ்ப்பாணம்**

**மற்றவர்களை கஷ்டப்படுத்துவது என்று தெரியாமல் கஷ்டப்படுத்திவிட்டு வருந்துவது சரியானதா வியாசரே?**

இதற்கு ஒரு சாதாரண உதாரணத்தைக் கூற விரும்புகின்றேன். உங்களுக்குப் பிடிக்காத உணவை வேறு யாரும் தங்களுக்குப் பிடிக்கும் என்று கூறினால் எனக்கு அந்த உணவு பிடிக்காது என்று மட்டும் கூறுங்கள்.
“இந்த உணவை மனிதன் சாப்பிடுவானா?” என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள் பிளீஸ்.
பலபேரைப் பார்த்திருக்கின்றேன். உணவு விடயத்தில் இதை மனிதன் சாப்பிடுவானா என்று கூறி மற்றவர்களைச் சங்கடப்படுத்தி விடுவர்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**இ.விஜயரட்ணம் — கோவில் வீதி, யாழ்.**


**இலங்கையில் தமிழர் வரலாற்றை திரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது பெரும்பான்மை. ஆனால் கோட், சூட் போட்டவர்களும், முற்றும் துறந்த முனிவரும் கல்லாய் இருக்கிறார்கள். இலங்கையில் நல்லிணக்கம் நடைமுறைப்படுத்தப்படுமா?**

அவர்கள் கல்லாய் இருக்கின்றனரா அல்லது காருக்கான போமிட்டுக்காக இருக்கின்றனரா? என்பது எமக்குத் தேவையற்றது.
ஆனால் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் குளியல் அறையில் பேசிப் பயன் ஏதும் ஆகப் போவதில்லை என்பதே எமது கருத்து.
ஆரம்பக் கல்வி மாணவர்களிற்கான வரவேற்பு நிகழ்வில் வந்து அரசியல் பேசும் அரசியல் வாதிகள் அதை பாராளுமன்றில் பேசத் தலைப்பட்டால் போதும் எல்லாம் மாறும்.

**நிதர்சன் — வல்வெட்டித்துறை**

**மிஸ்ரர் வியாசர் அவர்களே! உங்கள் பிறந்த நாள் நவம்பர் 27 ஆம் திகதியாமே உண்மையா?**

நீர் அப்படிக் கூறினால் நானும் சரி அப்படித்தான் என ஒத்துக்கொள்வேன்.
அன்றைய தினம் எனது பெயரில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்கி பிறந்தநாளை அனுஷ்டிப்போமே.
27 இல் எனது பிறந்த திகதியான 23 ஐ கழித்துப் பார்த்தேன் 4 வந்தது. அட நான்காம் மாடிக்கு நான் போவது உறுதியாகி விட்டதையும் உணர்ந்து கொண்டேன்.
என்ன தம்பி ஆரம்பிக்கலாமா?



உலகக் கிண்ண பயிற்சி ஆட்டங்களில் இலங்கை அணி அபாரமாக விளையாடுகிறதே. கிண்ணம் வெல்ல வாய்ப்பிருக்கிறதா வியாசரே?

**இதழினி — புலோலி**

**இன்னொருவரின் பொய் வார்த்தைகளைக் கேட்டு உண்மையான உறவை இழப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் வியாசரே?**

சுயமாக எது சரி எது பிழை என்பதை பிரித்தறிந்து பார்க்காமல் மற்றவரின் சொல்பேச்சைக் கேட்பவர்களை நட்பில் வைத்திருந்தீர்கள் என நீங்கள் தான் வெட்கப்பட வேண்டும்.
இனி உங்களை நிரூபிக்க முயலாதீர்கள்.
உங்களையும் உங்கள் நேர்மையையும் புரியும் காலம் ஒன்று வரும். அப்போது உங்கள் காலடியில் கிடப்பார் அவர்.
அதுவரை பொறுமையாய் உண்மையாய் ,இருங்கள்.உங்கள் நோக்கம் வெற்றிபெறும்.இது நிச்சயம்.

**சுதன் — குப்பிலான்**

**சர்வதேசத்தை நம்பாது தன்னை நம்பும்படி இலங்கை அரசு தமிழினத்திடம் கூறுவது எந்த வகையில் நியாயம் வியாசரே?**

ஆடு நனைகிறது என ஓநாய் அழுததாம் என எங்கள் தாத்தா அடிக்கடி கூறுவார்.
இதற்கு அப்போது எனக்கு அர்த்தம் புரியவில்லை.
ஆனால் இப்போது புரிகிறது ஓ அது இதுவா என.
என்ன செய்ய ஆண்ட இனம் அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலை போனவர்களுக்கு வாக்களித்ததனால் எல்லாவற்றையும் இழந்து வெறுவிலியாய் நிற்கிறது.
இனி தமிழினத்திற்கு மீட்சி உண்டென யாம் கருதவில்லை. அந்த மீட்பர் இப்போது இல்லை என்பது தான் இதயம் வலிக்கக் கூறும் உண்மை.

**ப.சுகந்தன் — அம்பனை**

**சூம் கல்வி சுகமானதா? சுமையானதா வியாசரே**

சூம் கல்வி முறை சிறப்பானதா இல்லையா என்பதைத் தாண்டி இந்த சூம் வகுப்புகளில் எத்தனை மாணவர்கள் பங்குபற்றினர் என்பதைக் கணித்துக் கொள்ள வேண்டும்.
அனைவருக்கும் கல்வி என்பது சூம் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டதா? ஒருவேளை உணவுக்கே வழியில்லாமல் எத்தனை குடும்பங்கள் உண்டு.அந்த வீட்டில் சிமாட் தொலைபேசி இருக்குமா? அந்தப் பிள்ளை சூமில் படிக்குமா? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கும் வரை சூம் வெற்றியளித்துள்ளது என எவரும் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**சிவன் — வதிரி**

**தனக்குத்தான் எல்லாம் தெரியும் என மற்றவர்களைப் பேசவிடாது தான் மட்டும் பேசிக் கொண்டே இருப்பவர்கள் பற்றி?**

அண்மையில் ஒரு அன்பர் வலம்புரிக்கு கடிதம் எழுதியிருந்தார். அதில், தமிழ் கொலை செய்யப்படுகிறது. அந்த தமிழ்க் கொலையை ஊடகங்களே செய்கின்றன. இப்படி தமிழ்க் கொலை செய்துவிட்டு எதற்கு தமிழை வளர்க்கிறோம் என்று கூறுகிறீர்கள் என ஒரு பாரதத்தையே எழுதியிருந்தார்.
இதில் என்ன வேடிக்கை என்றால் அவர் இறுதி வரை தனது பெயரைக் குறிப்பிடவே் இல்லை.
தனது பெயரைக் கூட துணிந்து கூற முடியாத அவர் தமிழ்க் கொலை பற்றி மற்றவருக்கு வகுப்பெடுப்பது தான் சிரிப்பின் உச்சம்.

# அற்புதங்களுக்கான காலக்கெடு!



உன்னால ஒரு விஷயம் முடியாதுன்னு யார் சொன்னாலும் நம்பாத, நான் உட்பட உனக்குன்னு ஒரு கனவு இருக்கு. அதை கெட்டியா பிடிச்சுக்கோ. முயற்சி பண்ணித் தோத்தவங்கதான் ஒரு விஷயத்தை முடியாதுன்னு சொல்லுவாங்க. அதைக் கேக்காத. உனக்கு வேண்டியதை நீதான் தேடி எடுத்துக்கணும்...”

சகலவற்றையும் இழந்து அடுத்த நாள் என்ன செய்யப்போகிறோம் என்பது தெரியாமல் தளர்ந்து குறுகிப்போன உடலோடு தூரத்துக் கட்டடங்களையும் பணம் துரத்தும் மனிதர்களையும் பார்த்தபடி தன் மகனுக்கு இதைச் சொல்வார் வில் ஸ்மித், ‘The Pursuit of Happyness’ படத்தில். கூடைப் பந்தை வைத்து அவர் சொன்னதை 90களில் பிறந்தவர்களுக்கு கிரிக்கெட் மைதானத்தைக் காட்டிச் சொன்னார்கள் அப்பாமார்கள். அந்தப் பத்தாண்டுகளில் பிறந்த அநேகம் பேருக்கு கிரிக்கெட்தான் தந்தையுடனான முதல் உரையாடல். தந்தைகள் அப்படி விரல் நீட்டிக் காட்டியபோது எதிரில் நின்றிருந்தவர் டோனி. இந்திய நிலப்பரப்பின் இடுப்பு இடுக்கிலிருந்து வந்து மாபெரும் கனவைச் சுமந்து நின்ற சாமானியன். அதனாலோ என்னவோ அப்பாக்கள் அறிமுகப்படுத்திய அந்த விளையாட்டையும் அந்த நபரையும் இப்போதும் இறுக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறது மனது. தந்தையின் தோள் மீதேறித் திருவிழாவை முதல் தடவை காணும் குழந்தைக்கு மனிதத் தலைகளும் கலர் விளக்குகளுமான காட்சி இறுதி நாள்வரை பதிந்திருப்பதைப்போல.

மிகச்சரியாக ஓராண்டுக்கு முன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ப்ளே ஓப் வராமல் போனபோது எழுதிய கட்டுரையை ‘காட்டுராஜாவுக்கு வயதாகலாம். ஆனால் அதன் சண்டை செய்யும் வேட்டைக் குணத்திற்கு என்றும் வயதாவதில்லை’ என முடித்திருந்தேன். அதை இந்த ஆண்டு மெய்யாக்கியிருக்கிறார் டோனி. விழுந்த போதெல்லாம் அதனிலும் வேகமாய் மீண்டெழுந்து வெற்றி நோக்கி ஓடுவதுதான் அவரை ஒரு பெருங்கூட்டம் இத்தனை ஆண்டுகளாகக் கொண்டாடுவதற்கான முக்கிய காரணம். ‘சச்சின் அவுட்டா யிட்டா ரி.வியை ஓப் செஞ்சுடுவோம்’ என்பதை அப்படியே திருப்பிப் போட்டவர் டோனி. ‘அவ்வளவுதான் மட்ச். இனி எங்கத்த ஜெயிக்கிறது’ என இதயம் கூப்பாடு போடும் நேரத்தில், ‘ரி.வியை கொஞ்ச நேரம் ஓப் பண்ணிடுவோம். டோனி கண்டிப்பா ஏதாவது மஜிக் பண்ணிடுவாரு. ஒன் பண்ணிப் பாக்குறப்போ எல்லாமே மாறியிருக்கும்’ என அதீத நம்பிக்கையில் அணைத்தவர்கள் எக்கச் சக்கம் பேர், நான் உட்பட. 2013 சம்பியன்ஸ் டிராபி எல்லாம் அப்படி நிகழ்ந்த அற்புதம்தான்.

இப்போதும் ஹாட்ஸ்டாரை சட்டென மூடிவிடுகிறேன்தான். ஆனால், அற்புதங்கள் நிகழுமென்றல்ல. அயராது உழைக்கும் அம்மாவோ, அப்பாவோ அண்ணனோ ஒருநாள் சட்டென படுத்த படுக்கையாகிவிட்டால் அந்த நிதர்சனத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மன நிலைதான். ‘இவருக்கெல்லாம் எதுவும் ஆகாது’ என்கிற நம்பிக்கையில் விழும் அடி அவர்களைக் கடக்கவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் தவிக்க விடுமே? அப்படி டோனியின் தடுமாற்றத்தையும், அவரால் அணி தோல்வியைத் தொடும் நிலையும் காணச் சகிக்காமல்தான். அற்புதங்களுக்கும் காலக்கெடு உண்டு போல!

விளையாட்டுலகம் கருணையற்றது. நீங்கள் திரும்பத் திரும்ப வென்று கொண்டே இருக்க வேண்டும். பழைய வரலாற்றை மட்டுமே பேசிக் கொண்டே இருக்க முடியாது. வெற்றி ஒரு புலிவால்!

போன சீசனில் ‘நிச்சயமாக இல்லை’ என ஓய்வு குறித்து டோனி சொன்னதில் இருந்த உறுதி இந்த வருடம் அவர் வார்த்தைகளில் இல்லை. ‘அணிக்கு அவரின் பட்டிங் இடைஞ்சலாக இருக்கிறது’ என்பதை அவருமே உணர்ந்திருக்கிறார். ‘என்னைப் பற்றி இனி யோசிக்க முடியாது. அடுத்த பத்தாண்டுகளுக்கான அணியை உருவாக்க மெனக்கெடவேண்டும்’ என அவர் சொன்னதன் காரணமும் இதுதான். ‘என்னை எப்போதோ ப்ளேயிங் லெவனிலிருந்து தூக்கியிருக்கவேண்டும். ஆனால் அணி நிர்வாகம் தொடர்ந்து என்னைத் தாங்கிப் பிடித்தது’ என வென்றபின் சொன்னார் மொயீன் அலி.

மனிதர்களுக்கு இயலாத விஷயம் எது? 1911-க்கு முன்புவரை அது தென் துருவத்தைத் தொடுவதாய் இருந்தது. 1953 வரை அது எவரெஸ்ட் உச்சியை அடைவதாய் இருந்தது. ஆனால் என்றென்றும் மனிதர்களுக்கு முடியாதது ரொம்பப் பிடித்தவர்களுக்கு விடை கொடுப்பதுதான். டோனியே முடிவெடுத்து கிரிக்கெட்டை விட்டாலொழிய கிரிக்கெட் அவரை விடப்போவதில்லை. ஆனாலும் இனியொருமுறை அவரை களத்தில் அழுத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கோப்பை வெல்லும் கப்டனாக, யார்க்கர்களை சிக்ஸர்களாய் சிதறடிக்கும் பினிஷராக, மைக்ரோ நொடியில் பெயில்ஸைத் தூக்கும் கீப்பராகப் பார்க்க முடியாதோ என்பது தான் இப்போதும் கிரிக்கெட் ரசிகர்களை அழுத்திக் கொண்டே இருக்கிறது. அவர் நிறையவே சொதப்புகிறார் எனத் தெரிந்திருந்தும் எல்லாரும் பாய்ந்து பாய்ந்து முட்டுக்கொடுப்பது அவருக்கு விடை கொடுக்க முடியாமல்தான். இன்னொரு காரணமும் இருக்கிறது. போன தலைமுறைக்கும் இந்தத் தலைமுறைக்குமான கிரிக்கெட் உரையாடலின் கடைசிக் கண்ணி டோனிதான். திருவிழாவில் தோள் மீதேறிப் பார்த்த பிரமாண்ட கட் அவுட் அது. அந்தக் கண்ணி அறு படப் போகும் பதற்றம்கூட. ‘I was hopi ng to pulloff one last surprise’ என அவெஞ்சர்ஸில் அயர்ன் மேன் சொல்லுவதைப் போலத்தான் இப்போது தங்கள் கிரிக்கெட் சுப்பர் ஹீரோவிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ரசிகர்கள். கடைசியாய் ஒரு தடவை அந்த அற்புதம் நடக்கக் கூடும், டோனியின் உடலும் மனதும் இசைவு கொடுத்தால்!

‘எங்கோ ஒரு மூலையிலிருந்து வந்த சாமானியன் இந்தியாவின் முகமாக மாற முடியும்’ எனப் பாடமெடுத்த டோனிதான், ‘வெற்றி பெற நீங்கள் அனுபவமும் ஆதரவும் பெற்றவராய் இருக்க வேண்டிய அவசியமில்லை’ என சாதித்த டோனிதான் இப்போது, ‘வாழ்க்கை கொடுக்கும் அடிகளைப் போல வேறு யாரும் கொடுத்துவிட முடியாது. ஆனால் எவ்வளவு அடி வாங்குகிறோம் என்பது முக்கியமல்ல, அதைத்தாண்டி அடுத்தது என்ன என்பதை நோக்கி நகர்ந்து சென்று கொண்டே இருக்கவேண்டும்’ எனராக்கி பட வசனத்தை நிஜத்தில் காட்டி நிதர்சனத்திற்குப் பழக்கப்படுத்துகிறார். முந்தைய பாடங்களை ஏற்றுக் கொண்டதைப் போல இதையும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அடுத்த ஐ.பி.எல்லுக்குள் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் உலகின் ஆதிகுடி தோன்றிய அதே ஆபிரிக்கக் கண்டத்தில்தான் உலகின் முதல் மலையும் வீற்றிருக்கிறது. பரிணாமத்தின் அத்தனை கோடி மாற்றங்களையும் அமைதியாய் தூரத்திலிருந்தபடி பார்த்துக்கொண்டிருக்கிறது அந்த மாமலை. கிரிக்கெட் உலகைப் பொறுத்தவரை டோனிதான் அந்த மாமலை. மாமலை போற்றுதும்!

# மருத்துவ வரலாற்றில் மைல்கல்



உலகிலேயே மனிதனுக்கு அடுத்து மிக ஆபத்தான உயிரினம் எது தெரியுமா? அவ்வப்போது நாம் தட்டித் தூக்கிப் போடும் கொசுதான். மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா என ஒவ்வொரு வருடமும் சுமார் ஏழரை இலட்சம் பேரைக் கொல்கிறது கொசு. இதில் மலேரியாவால் இறப்பவர்கள் மட்டும் நான்கு இலட்சத்துக்கும் அதிகம். இந்த மலேரியாவுக்கு எதிராகப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள் மனிதர்கள். கி.மு. 2700 ஆம் ஆண்டிலேயே மலேரியா நோய் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. ரோமாபுரி சாம்ராஜ்யம் சரிந்ததில் கூட மலேரியாவுக்குப் பங்குண்டு. இத்தனை ஆண்டுகள் கழித்து இன்றும் மலேரியாவுடனான மனிதனின் போர் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலேரியாவின் தீவிரத்தை உணர்ந்த மேற்கத்திய நாடுகள் 1950களில் மலேரியாவைக் கட்டுக்குள் கொண்டு வந்தன. கொசுக்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இதைச் செய்தனர். ஆனால், பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் இன்று வரை இது சாத்தியமற்ற ஒரு விடயமாகவே இருக்கிறது. உலகில் மலேரியாவால் பாதிக்கப்படுபவர்களில் 94% ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

அனோபிலிஸ் (Anopheles) என்ற வகைக் கொசுக்களாலேயே மலேரியா பரப்பப்படுகிறது. இந்தக் கொசுக்கள் வாழ்வதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை ஆபிரிக்காவில் நிலவுகிறது.

இது மட்டுமல்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் இந்த நாடுகளில் வலுவான சுகாதாரக் கட்டமைப்பு இல்லை, நீர் மேலாண்மை இல்லை. இதனாலேயே மலேரியாவைக் கட்டுக்குள் வைத்திருப்பது இந்த நாடுகளுக்குப் பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. இப்போது கொரோனாவும் உடன் சேர்ந்ததால் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் இன்னும் தொய்வடையவே செய்திருக்கின்றன. இந்தச் சூழலில்தான் மலேரியாவுக்கான முதல் தடுப்பூசியைப் பரிந்துரை செய்திருக்கிறது உலக சுகாதார அமைப்பு (WHO).

மஸ்க்யூரிக்ஸ் (Mosquirix) என்ற பெயரில் GlaxoSmithKline என்ற ஃபார்மா நிறுவனம் இந்தத் தடுப்பூசியைத் தயாரிக்கிறது. குழந்தைகளுக்கான இந்தத் தடுப்பூசி மலேரியா நோய்க்குக் காரணமான ஐந்து ஒட்டுண்ணிகளில் முக்கியமான Plasmodium falciparum-க்கு எதிரான எதிர்ப்புச் சக்தியைத் தருகிறது.

ஆபிரிக்காவில் ஏற்கனவே கொசு வலைகள் தருவது, பூச்சிக்கொல்லிகள் தெளிப்பது போன்ற மலேரியா தடுப்புப் பணிகள் நடந்து வருகின்றன. அத்துடன் தடுப்பூசி போடுவதையும் சேர்ப்பதே முதல்கட்ட நடவடிக்கையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

வலி சொல்லும் தொடர்...

**கொழும்புக்கு புலிகளின் தற்கொலை குண்டுதாரியை ஏற்றி வந்து தாக்குதல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தவன் என்று அவுஸ்திரேலிய புலனாய்வுப் பிரிவினர் சந்தேகத்தின் பேரில் இந்த முகாமில் தடுத்து வைத்திருக்கிறார்கள்.**

"நேற்றிரவு எல்லா பிரச்சினைகளும் முடிவடைந்து அப்பாஸ் எப்படித் தூங்கப்போனான்... சம்பவ அறிக்கையில், மாத்திரை கொடுத்ததாகக் கூறியிருக்கிறீர்களே..." "ஆம், இரண்டு பனடோல்கள் கொடுத்து, அரை மணி நேரத்தில் தூங்கி விட்டான்."

"பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஒரு சிறுவனுக்கு இரண்டு பனடோல்கள் கொடுப்பதற்கு உங்களுக்கு யார் அதிகாரம் தந்தது?" நான் மருத்துவப் பணிப்பாளரைப் பார்த்தேன். அவர் எனது பார்வையைத் தவிர்ப்பதற்காகவே, சம்பவ அறிக்கையை உன்னிப்பாக வாசிப்பது போன்ற பாவனையிலிருந்தார்.

அந்த அறையில் மேசையின் நடுவிலிருந்த கோழி எலும்பும் நானும் தான் பேசுவதற்கு நாதியற்றவர்களாகக் கிடந்தோம். கேள்வி எலும்புகளால் என்னை மாறி மாறிப் போட்டு குதறி முடித்த, குடிவரவு அமைச்சின் அதிகாரிகள், ஒருவாறு இடைவேளை தந்தார்கள்.

"அப்பாஸின் வழக்கு வெளியே அகதிகள் நல அமைப்புகளுக்கு நன்கு தெரியும். அவனை ஒவ்வொரு நாளும் வந்து பார்ப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை முதற்கொண்டு அத்தனை சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களும் அவனை, தடுப்பில் வைத்திருப்பது தொடர்பாக கண்டன அறிக்கை விடுத்திருக்கின்றன.

ஆனால், அவனது பின்னணி குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கும் வரைக்கும், அவனை விடுதலை செய்ய முடியாது என்று அவுஸ்திரேலிய புலனாய்வுத்துறையும் போலிஸாரும் முடிவெடுத்திருக்கிறார்கள். அதுவரைக்கும், அவனைப் பாதுகாப்பாக கண்காணிக்க வேண்டியது எங்களது பொறுப்பு. உங்களது அமைப்பின் பொறுப்பு."

அதிகாரிகள் ஒவ்வொரும் பேசி முடிக்கும்போது, நித்திரை போதாத எனது மூளை இருண்டு இருண்டு விடிந்தது. "நாளைமுதல், காலை சந்திப் பின்போது ஒவ்வொரு நாளும் அப்பாஸ் தொடர்பான தனி அறிக் கையை உங்களிடமிருந்து எதிர் பார்க்கிறோம்." "யெஸ் மேம்."

"எந்நேரமும் கண்காணிப்பதற்குக் குறைந்தது ஓர் அதிகாரியை நியமித்து, அவனது நடவடிக்கைகளைப் பதிவு செய்தால், அது எமக்குப் பேருதவியாக இருக்கும்." "கண்டிப்பாக." ஒருவாறு சந்திப்பு நிறைவுக்கு வந்தது.




இரத்தமும் நிணமும் அவன் நினைவில் இன்னமும் சமிபாடு அடையாத இறைச்சியாகப் புரையேறிக் கொண்டிருக்கிறது. குடிவரவுக்காரர்கள் வகுப்பெடுப்பதுபோல, அவனை நினைத்தபடியெல்லாம் கட்டுப்படுத்திவிட முடியாது.

ஆனால், குடிவரவு அமைச்சினர் தங்கள் காகிதக் கோப்புகளுக்குள் அவனுக்கு மருந்து வைத்திருப்பதைப்போல, ஒவ்வோர் அறிக்கையாக எடுத்துவைத்து, முகத்துக்கு முன்னால் அசைத்து அசைத்து காற்றிலே கோலாட்டம் போட்டனர்.

கேட்டு முடித்த சட்டங்களையும் திட்டங்களையும் தூக்கிக்கொண்டு முகாம் அலுவலகத்துக்கு நடந் தேன் "என்னவாம் இமிகிரேஷன் மாப்பிள்ளைகள்..." ஊர்ந்து வந்து கொண்டிருந்த என்னைப் பார்த்து அலன் நக்கலாகக் கேட்டான். சிரித்துக்கொண்டு, மீதி சிகரெட்டை இழுத்தான்.

"கோழி எலும்பால் அப்பாஸுக்கு ஏற்பட்ட காயத்துக்கு நாங்கள்தான்பொறுப்பாம்." சக அதிகாரியென்றாலும் சொல்லியிருக்கத் தேவையில் லாத தகவல். உள்ளே வெந்து கொண்டிருந்த வெறுப்பில் உளறி விட்டேன்.

வேகமாக வெளியே புகையை ஊதிய அலன், குடிவரவு அமைச்சு அலுவலகத்துக்குள்ளிருக்கும் அத்தனை அதிகாரிகளுக்கும் அடைமொழியாக, தனக்குத் தெரிந்த செழிப்பான கெட்ட வார்த்தைகளைக் கோர்த்து கோர்த்து திட்டினான்.

திட்டும்போது மிக கவனமாக தனது குரலைத் தாழ்த்திக் கொண்டான். வெடித்துப் பறந்த பேச்சில், அவனது நிக்கொட்டின் தசைகள் குலுங்கின.

"அடுத்த தடவை, அப்பாஸ் கோழிக் காலோடு நிற்கும்போது நாங்கள், இரண்டு ஆப்கான் ரொட்டியை கொண்டுபோய் கொடுத்துப் பார்ப்பம். சாந்தி, சமாதானத்தோடு எங்களை ஆசீர்வதிக்கிறானா என்று. முழந்தாளில் குந்தியிருந்து ஜெபித்துக்கூடப் பார்க்கலாம்."

மீண்டும் ஒரு கடுஞ்சொல்லோடு காறித் துப்பினான். ஒரே நாளில் அப்பாஸ் என்ற அச்சம் மிகுந்த பெயர் முகாம் முழுவதும் மூண்டுவிட்டது.

அலுவலகத்துக்குள் சென்ற நான், ஏ.சி-யை சிறிது அதிகரித்தேன். தூக்கம் போதாத கண்கள் வலியெடுத்தன. பிரின்ட் எடுத்து அலுவலகச் சுவரில் ஒட்டி யிருந்த அப்பாஸின் படத்தைப் பார்த்தேன். அவனது கண்கள் என்னையே பார்ப்பது போலிருந்தன.

தேநீர் ஊற்றிக்கொண்டு வெளிவிறாந்தைக்கு வந்தேன். சிறிலங்கன் பெடியன்களும் பங்களாதேஷ், பர்மா இளைஞர்களும் கைப்பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். வலையின் இரண்டு பக்கங்களுக்கும் மாறி மாறி தாவிக்கொண்டிருந்தது பந்து. முதல்நாள் பெய்த மழைக்கு சம்பந்தமே இல்லாத வெயில் பகலை நிறைத்திருந்தது. "என்ன அண்ணன், நேற்றிரவு ஏதோ பெரிய சத்தம் கேட்டுது. புதுசா வந்த பெடியனா..."

தானும் ஒரு தேநீரை போட்டுக் கொண்டு அருகில் வந்தான் நீதன். தலையை அசைத்து பதில் சொன்னபடி, "சத்தம் கேட்டதா" என்றேன்.

"ஓ... இரண்டு, மூண்டு தரம் பெரிய சத்தம் கேட்டது. உங்களில யாருக்கோதான் அடி விழுகுதாக்கும் எண்டு, நல்ல சந்தோசத்தில் போத்துக்கொண்டு படுத்திட்டன்."

தேநீர் சிந்திவிடாமல், குவளையை குந்தில் வைத்துவிட்டு பெரிதாகச் சிரித்தான். முகாமிலிருக்கின்ற தமிழ் அகதிகளில் நீதன் ஓர் ஓரமாக வைத்து மதிப்பிடக்கூடியவன். ஓரளவு ஆங்கில அறிவுடையவன். தமிழ் அகதிகளின் பிரச்சினைகளை அதிகாரிகளிடம் விளங்கச் சொல்லக்கூடியவன்.

கொழும்புக்கு புலிகளின் தற்கொலை குண்டுதாரியை ஏற்றி வந்து தாக்குதல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தவன் என்று அவுஸ்திரேலிய புலனாய்வுப் பிரிவினர் சந்தேகத்தின் பேரில் இந்த முகாமில் தடுத்து வைத்திருக்கிறார்கள்.

(அடுத்த வாரம் தொடரும்)

# கடல் புறா

## வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல்புறா!




புறா மீது ஆசையா? என்று அவள் தன்னைக் கேட்டுக் கொண்டு உள்ளூர வெட்கவும் செய்தாள். அந்த இன்ப நிகழ்ச்சிகளெல்லாம் அவள் இதயத்தில் வேதனையையும் காதலையும் கலந்து பிரவகிக்கச் செய்தன.

அடுத்து அன்று இரவு நேர இருந்த பயங்கரப் பயணம். அதில் இளைய பல்லவனுக்கு நேர இருந்த பயங்கர முடிவு இவை இரண்டும் அவள் இதயத்தை வேதனை வெள்ளத்தைக் கிளப்பிட விட்டன. இத்தனையையும் இதயம் தாங்க முடியுமா? முடியாததால் பொங்கிப் பொலபொலவென உதிர்ந்தன அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள்.

பஞ்சணையில் உட்கார்ந்திருந்த அந்தப் பருவ அஞ்சுகத்தின் பங்கஜ விழிகளிலிருந்து, நெஞ்சமுருகியதால் வழிந்த கண்ணீரைக் கருணாகர பல்லவனும் கவனிக்கத்தான் செய்தான். அந்தக் கண்ணீருக்குக் காரணமும் அவனுக்குப் புரிந்தேயிருந்தது. அநபாயனுக்காகத் தூது வந்த பறவைத் தீவின் அந்தக் காட்டுப்புறா, எதிரே பஞ்சணையிலிருந்த நாட்டுப்புறாவுக்குப் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டு விட்டதையும் அந்த நினைப்புகளும் அன்றிரவு நிகழ இருக்கும் நிகழ்ச்சியில் தான் ஏற்கப்போகும் பங்குமாக இணைந்து அவள் இதயத்தை ஒரு கலக்கு கலக்கி விட்டிருப்பதையும் புரிந்து கொண்ட கருணாகர பல்லவன், காஞ்சனாதேவிக்கு ஆறுதல் சொல்லவும் உற்சாகப்படுத்தவும் கட்டிலை நோக்கி மெள்ள நடந்தான்.

இரண்டு அடிகள் எடுத்து வைத்ததுமே வீரனுக்கு வேண்டிய உறுதி தன் நடையிலில்லாததை அவன் புரிந்து கொண்டான். தன்னுடைய இரும்பு இதயங்கூடப் பஞ்சணையில் உட்கார்ந்து விளக்குச்சுடரில் சொர்ணபிம்பமென ஜொலித்த அந்தப் பைங்கிளியின் துக்க நிலையைக் கண்டதும் தளர்ந்து விட்டதைக் கண்டு வியப்பின் வசப்பட்டான்.

ருத்திரனிடமே கைவரிசையைக் காட்டும் துணிவு கொண்ட காமனுக்குத் தன்னைப் பலவீனப்படுத்துவது ஒரு பெரிய விடயமல்ல என்பதையும் அறிந்து கொண்டான். அந்த உணர்ச்சியுடன் காஞ்சனாதேவியை அணுகிய இளைய பல்லவன், அவளது அழகிய தோளின்மேல் தனது வலது கரத்தை வைத்தான்.

அவள் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் பிரவகித்தன. அவள் இதயத்தை முதலில் நெகிழச் செய்தது நினைப்பு. இப்பொழுது நெகிழச் செய்தது தோளில் தவழ்ந்த கை. முதுகுப் புறமும் இறங்கிக் கொடுத்த அணைப்பு ஒன்று சிந்தனை, இன்னொன்று ஸ்பரிசம். இரண்டில் எது வேகமுடையது என்பதை அந்த இருவராலும் உணர முடியவில்லை.

வலது கையை அவளது முதுகில் ஆறுதலாகத் தவழவிட்டு அவள் பூவுடலை அணைத்த வண்ணம் அவள் பக்கத்தில் அமர்ந்த இளைய பல்லவன், இடது கையிலிருந்த புறாவை, "இந்தா காஞ்சனா! இதைப் பிடி!" என்று சொல்லி மடியில் செயலற்றுக் கிடந்த அவள் கைகளில் பொருத்தினான். அவள் இரண்டு கைகளும் புறாவைப் பற்றிக் கொண்டன. அப்படிப் பற்றி நின்ற அந்தச் சமயத்திலும் இடது கையால் அவள் கையையும் வலது கையால் அவள் முதுகையும் ஆறுதலாகத் தடவிக் கொடுத்தான் இளைய பல்லவன்.

அன்பின் அந்தச் செயலிலும் இன்பமும் வேதனையும் கலந்தே பாய்ந்தன. அவள் உடலில் வாழ்க்கையே இரண்டும் கலந்ததுதான் என்பதை அவள் அந்த நேரத்தில் சந்தேகத்துக்கு இடமின்றிப் புரிந்து கொண்டாள். அப்படிப் புரிந்து கொண்டதால் ஓரளவு சாந்தியும் பெற்றாள். அந்த சாந்திக்கு மேலும் உறுதியளிக்க நினைத்த இளைய பல்லவன் தன் இடது கையினால் அவள் முகத்தைத் திருப்பி வலது கையால் அவள் கண்களையும் வழவழத்த கன்னங்களையும் துடைத்தான்.

அந்தனைக்கும் அவள் ஏதும் பேசாமல் சிலையென உட்கார்ந்திருந்தாள். சிந்தனை அலைகளில் புரண்டு கொண்டிருந்த அவள் சித்தம் பேசும் சக்தியை அறவே இழக்கச் செய்திருந்தது. அவள் சித்தம் பேசும் சக்தியை அறவே இழக்கச் செய்திருந்தது. அவள் நிலையைப் புரிந்து கொண்ட இளையபல்லவன் தானே மீண்டும் பேசமுற்பட்டு "காஞ்சனா! நெஞ்சத்தை நெகிழவிடும் சமயமல்ல இது. துணிவுடன் இதயத்தை இரும்பாக்கிக் கொள்ள வேண்டிய நேரத்தை அடைந்து விட்டோம்" என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படி காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு சென்று வார்த்தைகளை உதித்தான்.

அப்படிக் காதுக்கருகில் அவன் பேசியபோது உதடுகளில் அவள் காதின் நுனிகளும் லேசாகப்பட்டன வாதலால் அவள் மேலும் உணர்ச்சிகளுக்கே அடிமையானாள். அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள இஷ்டப்படாததாலோ என்னவோ சரேலெனப் பஞ்சணையிலிருந்து எழுந்திருந்து சாளரத்தை நோக்கிச் சென்று அதனருகே நின்று ஒரு புறமாகச் சாய்ந்தும் கொண்டாள்.

புறாவைப் பிடித்த இடதுகை மார்பில் புதைத்து கிடந்ததால் புறாவின் பட்டு மேனியும் அவள் மார்பில் ஒரு புறத்தில் பட்டுக் கொண்டிருந்தது. அப்படியும் இப்படியும் திருப்பிய அதன் தலையும் மூக்கும் அங்கும் இங்கும் பட்டு வேதனையையும் அளித்துக் கொண்டிருந்தது. சாளரத்துக்கு வெளியே தொங்கிய பூங்கொடி அவள் இதய வெப்பத்தைப் போக்க மெல்லக் காற்றில் ஆடி ஆடி ஆலவட்டம் போட்டும் அவள் வெப்பம் மட்டும் மாறவில்லை. அதை அதிகப்படுத்த இளைய பல்லவன் பஞ்சணையை விட்டு எழுந்து அவளிருந்த இடத்துக்கு வந்து அவளுக்குப் பின்புறம் நின்று ஒரு கையைச் சாளரத்தின் மீதும் இன்னொரு கையை அவள் சிற்றிடையிலும் உலா விட்டான். அத்துடன் அவள் கன்னத்தை நோக்கித் தலையைத் தாழ்த்தி, "காஞ்சனா நேரம் ஓடுகிறது. ஐந்தாவது நாழிகை நாம் நமது பயணத்தைத் தொடங்க வேண்டும்" என்று மெள்ளச் சொன்னான்.

அந்தப் பயண விபரங்கள் தெரிந்த விடயந்தான். திரும்பத் திரும்ப சொல்லப்பட்டதும் கூட. ஆனால் திரும்பத் திரும்பச் சொன்னாலும் சலிக்காத விடயங்கள் உலகத்திலிருக்கின்றன அல்லவா? சிலவற்றை மறப்பதாலும் சிலவற்றைத் திரும்பத் திரும்ப நினைப்பதாலுமே மனிதனுக்குத் துணிவும் திருப்தியும் ஏற்படுகிறது. இதை உணர்ந்து தானோ என்னமோ இளைய பல்லவன் அந்த ஐந்தாவது நாழிகையை அவளுக்கு நினைப்பூட்டினான். ஆனால் அவள் நினைப்பு வேறாயிருந்தது. அந்த ஐந்தாவது நாழிகை புறப்பாடு தாங்களிருவரும் பிரியும் இறுதிப் புறப்பாடாகவுமிருக்கலாம் என்பதையே எண்ணி காஞ்சனாதேவி பதிலுக்குப் பெருமூச்செறிந்தாள். அந்தப் பெருமூச்சின் பொருளைப் புரிந்து கொண்ட இளையபல்லவன் சொன்னான். "தேவி! பயப்படாதே நாம் அத்தனை சுலபத்தில் பிரிய மாட்டோம்" என்று.


அதைச் சொன்ன இளைய பல்லவனின் குரலிலிருந்த உறுதியைக் கண்ட காஞ்சனாதேவி அது உண்மை உறுதியா? அல்லது தனக்குத் தைரியம் சொல்ல ஏற்பட்ட போலி உறுதியா? என்பதை நிர்ணயிக்கமாட்டாமல் "அதென்ன அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நிச்சயம் எதிலிருக்கிறது தேவி? பிரிவோம் என்பதில் மட்டும் இருக்கிறதா?" என்று வினவினான் இளைய பல்லவன் காதல் கரைபுரண்ட குரலில். "உள்ள அபாயம் பிரிவைத்தான் காட்டுகிறது" என்றாள் அவள் மெதுவாக.

"அந்த அபாயத்திலிருந்து நான் பலமுறை தப்பவில்லையா? ஏன் நீதி மண்டபத்தில் மரணக் கூண்டிலிருந்து தப்பி வரவில்லையா? அப்பொழுதில்லாத புது அபாயம் இப்பொழுது எங்கிருந்து வந்து விட்டது" என்றான் இளைய பல்லவன்.

தர்க்க ரீதியில் அவன் பேச்சு சரியாகத்தானிருந்தது. ஆனால் உணர்ச்சிகளின் பீதிக்கு அது பதில் சொல்ல முடியவில்லை. ஆகவே காஞ்சனா தேவி சொன்னாள்: "என் மனத்திலென்னவோ சஞ்சலம் குடிகொண்டிருக்கிறது வேதனை ஆட்கொண்டிருக்கிறது என் இதயத்தை" என்று.

(தொடரும்...)



# டாக்டர் - திரை விமர்சனம்



ஆள் கடத்தல் என்றால் அந்தக் காலச் சினிமா என்று சொல்லி விடுவார்கள். அதையே, ஆங்கிலத்தில் ஹியூமன் டிராபிக்கிங் என்று சொல்லிப் பாருங்கள், அட ஹோலிவுட் கதையா எனக் கேட்பார்கள்.

தமிழ் சினிமாவில் வந்துள்ள மற்றுமொரு ஆள் கடத்தல் கதை தான் இந்த டாக்டர். படத்தின் கதாநாயகன் ஒரு டாக்டர். அதனால் தான் படத்தின் பெயரும் டாக்டர். ஆனால், டாக்டர் என்பதால் படத்தின் ஹீரோ எந்தவிதமான ஹீரோயிசத்தையும் செய்யவில்லை என்பதும் உண்மை.

இயக்குநர் நெல்சன் அவருடைய முதல் படத்தில் போதைப் பொருள் கடத்தல் எனக் கதையமைத்திருந்தார். இந்த இரண்டாவது படத்தில் பெண் குழந்தைகள் கடத்தல் எனக் கதை எழுதியிருக்கிறார். அடுத்து விஜய் நடிக்க அவர் இயக்கும் பீஸ்ட் படத்திலும் ஏதோ ஒரு கடத்தலைத்தான் கதையாக வைத்திருப்பார் போலிருக்கிறது.

மிலிட்டரியில் டாக்டராக இருக்கும் சிவகார்த்திகேயனுடன் நிச்சயமான திருமணத்தை வேண்டாம் என்கிறார் படத்தின் கதாநாயகி பிரியங்கா அருள்மோகன். இவரது அண்ணன் மகள் திடீரென காணாமல் போக களத்தில் இறங்குகிறார் சிவகார்த்திகேயன். அதற்காக அவருக்கு பிரியங்காவின் குடும்பமே உதவியாக இருக்கிறது. காணாமல் போன அந்தச் சிறுமியைக் கண்டு பிடித்தார்களா? இல் லையா? என்பது தான் படத்தின் கதை.

சிறு வயதிலிருந்தே நிறைய கடத்தல் கதைகளையும், செய்திகளையும் படத்தின் இயக்குநர் நெல்சன் படித்திருப்பார் போலிருக்கிறது. அந்தத் தாக்கத்தில் மீண்டும் ஒரு கடத்தல் கதையை எடுத்திருக்கிறார். ஆனால், படத்தின் நாயகன் மிகச் சுலபமாக வில்லனை ரீச் செய்வதெல்லாம் சினிமாத்தனத்தின் உச்சம்.

திரைக்கதை டுவிஸ்ட்டுக்கெல்லாம் இயக்குநர் மெனக்கெடவில்லை. பீஸ்ட் படத்தில் இப்படியெல்லாம் வச்சிடாதீங்க பாஸ், விஜய் ரசிகர்கள் திட்டுகிறார்களோ இல்லையோ, அஜித் ரசிகர்கள் உங்களை கழுவி ஊற்றி விடுவார்கள்.

சட்டை போடும் போது கொலர் பட்டனையும் சேர்த்துப் போடும் அப்பாவி டாக்டர் சிவகார்த்திகேயன். தன்னை திருமணம் செய்து கொள்ள மறுக்கும் கதாநாயகி வீட்டில் ஒரு சிறுமி காணாமல் போனதும் அமைதியான ஆக்ஷன் ஹீரோவாக களத்தில் இறங்குகிறார்.

சிவகார்த்திகேயனை இப்படியெல்லாம் அமைதியாகப் பார்க்க நமக்குப் பொறுமை வேண்டும். எப்போதும் சிரிக்க வைக்கும் சிவகார்த்திகேயன்தான் ரசிகர்களுக்கு வேண்டும், சீரியசாக இருக்கும் சிவகார்த்திகேயனை ரசிகர்கள் ரசிக்க மாட்டார்கள் என்பதை இந்தப் படத்திற்குப் பிறகு சிவகார்த்திகேயனே புரிந்து கொள்வார்.

படத்தின் கதாநாயகி என பிரியங்கா அருள்மோகனைத் தனியாகக் குறிப்பிட முடியாது. சிவகார்த்திகேயனுக்கு ஜோடி மாதிரி என்பதற்காக வேண்டுமானால் அவரைக் கதாநாயகி எனச் சொல்லலாம். மற்றப்படி படத்தில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த இளவரசு, அர்ச்சனா, அருண் அலெக்சாண்டர், தீபா ஆகிய அனைவருக்குமே முக்கியத்துவம் உண்டு.

யோகி பாபு படம் முழுவதும் வருகிறார். ஆனால், ஒரு சில காட்சிகளில் மட்டுமே சிரிக்க வைக்கிறார். ரெடின் கிங்ஸ்லி நம் பொறுமையை ரொம்பவே சோதிக்கிறார். மிலிந்த் சோமன் போன்ற நடிகர்களை இரண்டு காட்சிகளில் காட்டி வீணடித்திருக்கிறார்கள்.

வினய் தான் படத்தில் வில்லன். ரிசார்ட் நடத்திக் கொண்டு சிறுமிகளைக் கடத்தும் தொழில் செய் பவர். அவரைப் பார்த்தெல்லாம் எந்தப்பயமும் வரவில்லை என்பது உண்மை.

மெட்ரோ ரயிலில் ஒரு நீளமான சண்டைக் காட்சி இருக்கிறது. எதற்கு அவ்வளவு நீளமான காட்சி என்றே தெரியவில்லை. படத்தின் ஆரம்பத்திலேயே அடுத்தடுத்து இரண்டு பாடல்கள் வந்து விடுகிறது. ஆனால், அனிருத் இசையில் சுப்பர் ஹிட் பாடலான செல்லம்மா... பாடலை வைக்க சரியான இடமில்லாமல், படம் முடிந்தன் பின் அந்தப் பாடலைப் போடுகிறார்கள்.

தியேட்டரில் பாட்டைப் பார்த்துட்டு போங்க சார் என கதவைத் திறக்க மறுக்கிறார்கள் தியேட்டர்காரர்கள். ஒரு ஹிட்டான பாடலை ஒரு கனவுப் பாடலாகவாவது வைத்திருக்கலாமே இயக்குநர் சார்?

சிவகார்த்திகேயனுக்குப் பதிலா ஜெய்சங்கர், வினய்க்குப் பதிலா அசோகன் என நடிகர்களை மாற்றிப் பார்த்தால் 1970களில் இந்தப் படம் வந்திருந்தால் ஒரு வேளை ஹிட் ஆகியிருக்கலாம்.

சரி, படத்தில் பாராட்ட ஏதாவது இருக்குமே என யோசித்து, யோசித்து, யோசித்துப் பார்த்தால்...சாரி, அப்படி எதுவுமே ஞாபகத்திற்கு வரவில்லை. இந்த ஆள் கடத்தல், ஹியூமன் டிராபிக்கிங் இதுக்கெல்லாம் கொஞ்சம் ரெஸ்ட் கொடுங்க டைரக்டர்ஸ்.

# சம்பளத்தை உயர்த்திய கீர்த்தி சுரேஷ்



தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் பிஸியாக நடித்துக் கொண்டிருப்பவர் கீர்த்தி சுரேஷ். தமிழில் "அண்ணாத்த, சாணி காயிதம்" ஆகிய படங்களிலும், தெலுங்கில் "குட்லக் சகி" நடித்து முடித்துள்ளார்.

தெலுங்கில் தற்போது மகேஷ் பாபு ஜோடியாக "சர்க்காரு வாரி பாட்டா" படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்திற்குப் பிறகு நானி ஜோடியாக "தசரா" என்ற படத்தில் நடிக்க உள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

அறிமுக இயக்குநர் ஸ்ரீகாந்த் ஒடேலா இயக்க உள்ள இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்க உள்ளார். இப்படத்திற்காக கீர்த்தி சுரேஷ் 3 கோடி ரூபாய் சம்பளம் வாங்கியுள்ளதாக டோலிவுட் வட்டாரங்கள் கிசுகிசுக்கின்றன.

ரஜினிகாந்த், மகேஷ் பாபு என இரு மொழிகளிலும் முன்னணி நடிகர்களுடன் நடிப்பதால் கீர்த்தி சம்பளத்தை உயர்த்தி விட்டதாகச் சொல்கிறார்கள்.

அவர் கேட்கும் சம்பளம் இதை விட அதிகம், ஆனாலும், 3 கோடிக்கே அவர் நடிக்க சம்மதம் சொல்வதாகச் சொல்கிறார்கள்.

நடிகைகளில் நயன்தாரா அதிகபட்சமாக 5 கோடி வரை சம்பளம் வாங்குகிறார்.

மற்ற நடிகைகளின் சம்பளம் நயன்தாரா வாங்கும் சம்பளத்தை விட குறைவுதான் என்பது கூடுதல் தகவல்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : திருமதி பழனிச்சாமி
இயற்றியவர் : வாலி
இசை : இளையராஜா
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்ரமணியம்




பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்
பாவ சொகுசு பாக்க கோடி பெறும் கோடி பெறும்

பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்
பாவ சொகுசு பாக்க கோடி பெறும் கோடி பெறும்

பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்
பாவ சொகுசு பாக்க கோடி பெறும் கோடி பெறும்

சித்தாட போட்ட சின்ன மணித் தேரு
சில்லென்னு பூத்த செவ்வரளி பூவு
செப்பால செஞ்சு வச்ச அம்மன் சேல தான்

பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்
பாவ சொகுசு பாக்க கோடி பெறும் கோடி பெறும்

குத்தால மேகம் எல்லாம் கூந்தலிலே நீந்தி வரும்
கொய்யாத மாங்கனியை கொடி இடை தான் ஏந்தி வரும்
மத்தாப்பு வானம் எல்லாம் வாய்ச் சிரிப்பு காட்டி வரும்
மானோடு மீன் இரண்டை மை விழியோ கூட்டி வரும்
பொன்னாக ஜொலிக்கும் பெண் பாவை அழகு
ஒன்னாக கலந்த முன்னூறு நிலவு
பொட்டோடு பூவும் கொண்டு தாவும் மயில்தான்
பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்

செஞ்சாந்து குழம்பெடுத்து தீட்டி வைத்த சித்திரமே
தென்பாண்டி கடல் குளித்து கொண்டு வந்த முத்தினமே
தொட்டாலும் கை மணக்கும் தென் பழனி சந்தனமே
தென்காசி தூறலிலே கண் விழித்த செண்பகமே
பெண்ணாக பிறந்த பல்லாக்கு நீயோ
ஈரேழு உலகில் ஈடாக யாரோ
நெஞ்சோடு கூடு கட்டி கூவும் குயிலோ
பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்


பெண் என்ற ஜாதியிலே ஆயிரத்தில் அவள் ஒருத்தி
பொன் வைரம் கொடுத்தாலும் போதாது சீர் செனத்தி
கல்யாண பந்தலிலே நான் அவளை நேர் நிறுத்தி
பூமாலை சூட்டிடுவேன் மாப்பிள்ளை நான் பட்டுடுத்தி
அன்றாடம் அலைந்து எங்கேயும் தேடி
கண்டேனே எனக்கு தோதான ஜோடி
வந்தாச்சு காலம் நேரம் மாலையிடத்தான்

பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்
பாவ சொகுசு பாக்க கோடி பெறும் கோடி பெறும்
சித்தாட போட்ட சின்ன மணித் தேரு
சில்லென்னு பூத்த செவ்வரளி பூவு
செப்பால செஞ்சு வச்ச அம்மன் சேல தான்

பாத கொலுசு பாட்டு பாடி வரும் பாடி வரும்
பாவ சொகுசு ப்ாக்க கோடி பெறும் கோடி பெறும்

# தமிழர் வாழ்வியலில் தன்னிறைவு பொருளாதாரம் மீண்டும் மலர வேண்டும்

மற்றவர்களில் தங்கி வாழும் நிலையே அன்று தொட்டு இன்றுவரை எமது வடக்கு-கிழக்கு மக்களில் பெரும்பாலானோர் முக்கியமாக யாழ்ப்பாண மக்கள் தன்னிறைவான பொருளாதாரத்தைப் புறந்தள்ளி விட்டு காசுக்கட்டளைப் பொருளாதாரத்தில் (Money Order Economy) தம்மை வளர்த்தார்கள். தன்னிறைவான பொருளாதாரத்தில் கவனம் செலுத்தாது பிறரில் தங்கி வாழும் நிலையை வளர்த்ததனால் இன்று தமிழ் மக்கள் அரைப்பட்டினி, கால் பட்டினிக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். எமது வடக்கு-கிழக்கு மண்ணில் தரை வளம், கடல் வளம் மற்றும் பல் தொழில், கைத்தொழில் வளங்கள் இருந்தும் கொழும்பைக் கையேந்தி அரிசி, மாவுக்காக மட்டுமல்ல இன்னோரன்ன உணவுப் பண்டங்களையும் பெறக் கையேந்தி வாழும் வாழ்க்கை இன்றுவரை பின்பற்றப்படுகின்றது.




முக்கியமாக விவசாயம், கடற்றொழில் மற்றும் கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்களில் தன்னிறைவடைந்திருந்த சமுதாயம் எல்லாவற்றையும் விட்டு மாதச் சம்பளத்திற்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டார்கள்.

காடுகளைக் களனியாக்காது மேலும் நகரை நோக்கி இடம்பெயரத் தொடங்கினார்கள். இதனால் கிராமங்கள் பாழடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுக் காடுகளாக மாறின. இதில் முதலாவதாக சுற்றுச் சூழலை யாம் கணக்கெடுக்கவில்லை.

அத்துடன் விவசாயத்தையும் கடற்றொழிலையும் புறக்கணித்தமை, இதற்கு முத்தாய்ப்புக் கொடுத்தது போல உள்நாட்டு யுத்தம் எம் மக்கள் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல உயிர்களையே பறித்தெடுத்தது. இதனால் எமது மக்கள் இந்தியா உட்பட ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குக் குடும்பங்களுடன் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள்.

இங்கு கடலுணவு, தரை உணவு என்பன தன்னிறைவு பெறவில்லை. எமது நில, பூகோள அமைப்பானது கோடை காலத்தில் கடற்றொழிலும் மாரி காலத்தில் விவசாயம், கமம், தோட்டம் மற்றும் இன்னோரன்ன பயிர்ச் செய்கைகளை ஒரு ஆளே செய்யக் கூடியதாகவிருக்கின்றது.

உலக ஸ்தாபனங்களில் ஒன்றான UNICEF, சர்வதேச சிறுவர் பாதுகாப்பு இயக்கம் அதன் ஆய்வில் என்ன கூறுகின்றது என்றால் உலகில் உள்ள சனத்தொகையில் ஒரு கோடி மக்கள் ஒரு நாள் முழுப் பட்டினியும் மூன்றில் ஒரு பகுதியினர் ஒரு நாள் ஒரு உணவையும் மற்றைய மூன்றிலொன்று பகுதியினர் ஒருநாள் இரண்டு நேர உணவையும் உண்ண நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

அத்துடன், இயந்திரமயமாக்கலின் விளைவாக மனிதருக்கு வேலை பெற்றுக் கொள்வதே கல்லிலே நார் உரித்த மாதிரி. இதனால் வேலையற்ற இளைஞர்கள், மதுபோதைக்கு அடிமையாகி அதன் உந்து சக்தியால் களவு, கொள்ளை, மண் கொள்ளை, வாள் வெட்டு, கொலை, பாலியல் பலாத்காரம் போன்ற இன்னோரன்ன மனச்சாட்சிக்கு விரோதமான கீழ்த்தரமான ஈனச் செயல்களைச் செய்து வடக்கு-கிழக்குத் தமிழ்ச் சமுதாயம் பேரழிவுக்குள் தள்ளப்பட்டு விட்டது. இதே நிலை தொடருமானால் வீடு வாசல், கிராமம், நகரம், தேசம், சர்வதேசமும் உலகமே அழிந்து விடும்.

இப்படியாக பிரளய அழிவில், அதாவது ஐம்பூதமும் சீற்றங்கொள்ள அகோரத் தாண்டவம் ஆடுகையில் ஒருசில பேர் தப்பிப்பிழைத்து மீண்டும் மனித குலம் உருவாகும். இதையே எமது முன்னோரான ஞானிகள், யோகிகள், தவசிகள், புத்திஜீவிகள் மற்றும் மெய்ஞ்ஞானிகள், விஞ்ஞானிகள் என்போர் ஆழமாகவும் அகலமாகவும் பற்பல வழிகளில் சொல்லிப் போந்துள்ளார்கள். இவை மொழி, சமயம் மற்றும் இன்னோரன்ன மெய்ஞ்ஞான, விஞ்ஞான வழிகாட்டிப் போந்துள்ளார்கள்.

இம்முதுமொழிச் சமய விடயங்கள், குடியரசுகளுக்குள் வாழும் அரசியல் வாதிகளாலும் பாதாளக் கோஸ்டிகளாலும் வேரறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் வேரறுக்கப்பட்ட அக்கிர மங்கள் இந்த நாட்டில் மட்டுமல்ல உலகம் பூராவும் ஓர் அட்டுழிய நிலை வியாபித்துப் பழைய கிரேத யுகத்திற்குத் திரும்பிச் செல்லும் இக்ரேத யுகம் அழிய பின்பு திரேத யுகம் தோன்றும். இது முடிய துவாபர யுகம் தோன் றும். இது முடிய கலியுகம் தோன்றும்.

தற்போது கலியுகத்தின் உச்சக்கட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. முந்தைய கணிப்பின்படி இரண்டு யுகங்களுக்கிடையில் கோடி வருடங்கள் வித்தியாசம் ஏற்படுமென்று வெளிப்படுத்தினார்கள். ஆனால் தற்போது இரண்டாயிரம் வருடங்களே சிறு சிறு பிரளயங்களாக ஏற்பட்டு உலகம் அழிவுப் பாதைக்குப் போய்க் கொண்டிருக்கின்றது. எப்போது பஞ்சபூதங்களினது ஆட்சியும் மாட்சியும் ஏற்படுமோ? அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

இதன் முன்னோடி எச்சரிக்கைதான் தற்போதைய கொவிட்-19. இத் தொற்று நோய் தற்போதைக்கு முடிவுறுத்தப்பட மாட்டாது. ஒருசில வருடங்களுக்கு முழு உலகையுமே ஆட்டிப் படைக்கும் என்பது திண்ணம். எனவே சகல உலக மக்களும் நான் பெரிது, நீ பெரிது என மனிதருள் சண்டை செய்யாமல் மனிதத்தைக் கடைப்பிடித்துச் சகல சமூக வேறுபாடுகளையும் மறந்து ஒன்றே உலகம், ஒன்றே தெய்வம், ஒன்றே மனிதர்கள் என சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இன்றைய கிம்சை உலகத்தை விட்டு இல்லாதழித்து அகிம்சை எனும் ஆயுதத்தைக் கையில் எடுத்து மனுக்குலத்தை முன்னெடுத்துச் செல்ல சகல சர்வதேச அமைப்புகளும் ஐக்கிய நாடுகள் சபை ஊடாக நவீன யுகத்தை நோக்கி மெய்ஞ்ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் மேம்பட வேண்டும்.

கலாபூசணம், மருத்துவர்
மயில்வாகனம் இராசதுரை.

# சீனப் பெருஞ்சுவர்


சீனப் பெருஞ்சுவர்

மெங்க் சியாங்க் நு தனது தந்தையுடன் வசித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் அவர்களது தோட்டத்தில் சுரைக்காய்ச் செடியின் பின்னே ஒரு உருவம் மறைந்து, மறைந்து செல்வதை பார்த்தார்கள். சுரைக்காய்ச் செடி அவர்களது உயிருக்கு நிகராய் வளர்க்கப்பட்டது. எனவே அதனை சிதைக்கத்தான் வருகிறார்களோ என அருகே சென்று பார்த்தனர்.

அங்கே ஒரு அழகான இளைஞன் அச்சத்துடன் மறைந்திருந்தான். அப்போதைய சீன அரசை ஆண்டு வந்த சின் சிஹூவாங்கின் படைகள் சுவரைக் கட்டுவதற்காக அடிமைகளைத் தேடி வலை வீசிக் கொண்டிருந்தது. வலுவான இளைஞர்களைக் கண்டால் பிடித்துச் சென்று விடும்.

அவர்களுக்கு ஊதியம் எதுவும் கிடையாது. வெறும் உணவு மட்டும்தான். அதுவும் மூன்று வேளைக்கு கிடையாது. அவர்களை அந்தக் குடும்பம் அத்தோடு மறந்து விட வேண்டியது தான்.

அவ்வாறு தேடி வந்தவர்களின் கண்களுக்கு அகப்படாமல் தப்பி அங்கு மறைந்திருந்தான். மெங்க் சியாங்க் நு வும் அவளது தந்தையும் அவனுக்கு அடைக்கலம் தந்தனர். அவன் பெயர் ஃபான் சிலியாங்க்;

அரசுப்படைகள் போன பிறகு அவன் மெங்க் சியாங்க் நு இல்லத்திலேயே தங்கி விட்டான். இருவருக்கிடையே காதல் அரும்பியது. திருமணமும் நடந்தேறியது. மூன்றாவது நாளிலேயே அவன் அரசுப் படைகளிடம் பிடிபட்டு விட்டான். நீண்ட நாட்களாகியும் கணவன் வராததால் அவனைத் தேடி மெங்க் சியாங்க் நு சுவர் கட்டும் இடத்துக்குச் சென்றாள். அங்கு போன பிறகுதான் அவளது கணவன் பான் சிலியாங்க் இரண்டு நாட்களுக்கு முன் இறந்து போனது தெரிய வந்தது.

கணவனுக்காக ஒரு பாறையின் மீது அமர்ந்து அழுது கொண்டே இருந்தாள். அவளது துக்கத்தின் வெப்பம் தாளாது சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

செய்தி கேள்விப்பட்ட அரசன் சின் சிஹூவாங் அவளைக் கொன்றுவிட தீர்மானித்து கோபத்துடன் இந்த சுவர் இடிய நீ தான் காரணமா? என்று கேட்டான். அவள் திரும்பிப் பார்த்தபோது அவளது அழகிய முகத்தைப் பார்த்துப் பிரமித்து போனான். அவளது அழகில் மயங்கினான். தன்னை மணந்து கொள்ள முடியுமா? என்று கேட்டான்.

அதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்தாள். ஒன்று ஃபான் சிலியாங்க் உடலைத் தேடி எடுக்க வேண்டும். அவனது இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் மன்னர் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். மூன்றாவதாக கடலில் பிரயாணம் செய்ய வேண்டும். முதலிரண்டு நிபந்தனைகள் மீது மன்னனுக்கு உடன்பாடு இல்லை என்றாலும் அவள் மீது கொண்ட காதலால் சின் சிஹூவாய் சம்மதித்து விட்டான்.

அவள் கேட்டுக் கொண்டபடி அவளது கணவனின் இறுதிச் சடங்கு நடந்து முடிந்தபின் அவள் கடலில் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. நடுக் கடலில் அவள் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். சியாங்க் நு கடலில் விழுந்து இடம் ஷாண்டாங் மாகாணத்தில் உள்ள சிபோ நகரம். அவள் அழுது கொண்டிருந்த பாறை மற்றும் அவள் காலடித் தடங்கள் ஆகியன இன்றைக்கும் ஒரு சில சீனர்களால் வணங்கப்படுகிறது.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2433

Search for people, places and things

### கேசாயினி

கடவுள்: என்னடா...இப்போவெல்லாம் கோவிலுக்கு வருறதே இல்ல?




ஆமா...அப்படியே வந்து வேண்டிக்கிட்டா மட்டும் நீ தந்துருவ பாரு...?

### கஜந்தன்

வாட்ஸப்ல பேசுறாங்க பேஸ்புக்ல பேசுறாங்க... ஏன் டுவிட்டர்ல கூடப் பேசுறாங்க...



ஆனால் நேரில பார்த்தா மட்டும் பேச மாட்டாங்க...

### பவித்திரா


அழுவதற்காக தனி அறை உருவாக்கும் திட்டத்தை தொடங்கிய ஸ்பெய்ன்




நமக்குத்தான் அழுவுறதுக்குத் தனி நாடே இருக்கே....

### சுரேஸ்

மனிதரை உண்ணும் மீன் இனம் கொழும்பு குளங்களில் அதிர்ச்சித் தகவல் ! News



இதுவும் சீனா காரன்ர சதியாத்தான் இருக்கும் எல்லாரும் அலாட்டா இருந்துக்கோங்க

### நதீபா

தீபாவளி போனஸ் எப்படி சம்பளத்தோட வருமா இல்ல முன்னாடியே தந்திடுவீங்களா




உனக்கு முதல்ல தீபாவளிக்கு லீவ்ன்னு யார் சொன்னா?

### விஷ்ணு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 262

## பரிசுப் பொருட்களைத் தெரிவு செய்யும் போது

நாம் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களுக்குப் பரிசுப் பொருட்களைத் தெரிவு செய்யும் போது அது அவருக்கு உடற் சுகத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகவும் நல்ல நினைவுகளைக் கொடுக்கக் கூடியதாகவும் பிரயோசனப்படக் கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்து கொள்வது நல்லது.



அந்த வகையில் பின்வரும் பொருட்களைக் கருத்தில் எடுக்கலாம். "பழங்கள், முட்டை, ஓவியங்கள், நல்ல புத்தகங்கள், பதிவேடுகள், உடை, தலைக்கவசம், குடை, பாரம் குறைந்த பாதணிகள், வீட்டில் சமைத்த பலகாரங்கள், முட்டைமா, பயற்றம்மா, உழுத்தம்மா, வேலை செய்யும் பொழுது அணியும் கையுறை, உடற்பயிற்சி செய்யும் இயந்திரம், தாவரங்கள், விதைகள்" போன்றவை. இப்பொருட்கள் உடற் சுகத்தைப் பேண உதவியாய் இருக்கும்.

நாம் எமது எதிரிகளுக்கும், கோபக்காரர்களுக்கும் பரிசுப் பொருட்களைத் தெரிவு செய்யும் பொழுது சொக்லெட், இனிப்பு வகைகள், சோடா வகைகள், குடி வகைகள், மிக்சர், மாஜரின், பட்டர், கணனி, விளையாட்டுக்கான சீடிகள், சிகரெட் பக்கெற், பீடிக் கட்டு, பிஸ்கெட் பெட்டிகள் என்பவற்றில் ஒன்றையோ பலவற்றையோ தெரிவு செய்து கொள்ளலாம். இவை உடற் சுகத்துக்கு தீங்கு விளைவிப்பவையாகும்.

நாம் இன்னா செய்தாருக்கும் நன்னயம் செய்யும் பரம்பரையில் உதித்தவர்கள். எதிரியும் சுகத்துடன் வாழ வேண்டும் என்ற சிந்தனை உள்ளவர்கள். எனவே, இந்தப் பொருட்களை எதிரிக்குக் கூடப் பரிசாகக் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்வோம்.

என்றும் ஆனந்தமும் ஆரோக்கியமும் கொடுக்கக் கூடிய பொருட்களைப் பரிசாகத் தெரிவு செய்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## ஏன் இந்த கதவடைப்பு போர்?

தமிழ் எங்கள் மூச்சு என்று பேசிக் கொண்டிருக்கின்றோம். இதிலிருந்து மூச்சு எவ்வளவு முக்கியமானதென்பது எமக்கு தெரிந்திருக்கிறது. சுவாசம் எமது சுகத்துடன் பின்னிப் பிணைந்தது. சுவாசம் சுத்தமானதாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் சுகத்துடன் வாழ முடியும்.

வீடுகள், கட்டடங்கள் கட்டப்படும் பொழுது எவ்வளவு பெரிய யன்னல்கள், கதவுகள் இருக்க வேண்டும் என சட்ட விதிகள் இருக்கின்றன. இவை வீடுகளில் போதுமானளவு காற்றோட்டத்தை பேணி மக்களைச் சுகத்துடன் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டவையாகும்.

இவ்வாறு அமைக்கப்பட்ட யன்னல்களையும் கதவுகளையும் திருடர்களிற்கும் நுளம்புகளிற்கும் பய ந்து மூடிவைத்து விட்டு அதனுள்ளே ஒழிந்து வாழ்ந்து வருகின்றோம். இதனால் நோய் வாய்ப்படுகின்றோம். சுத்தமான காற்றில் 20 வீதம் ஒட்சிசன் இருக்கின்றது. இது மனிதனின் சுக வாழ்விற்கு முக்கியமானது. மனிதன் சுவாசிக்கும் பொழுது இந்த ஒட்சிசன் உள்ளெடுக்கப்பட்டு காபனீரொக்சைட்டு என்ற வாயு வெளிப்படுகின்றது. எனவே பூட்டிய அறையினுள் நாம் உறங்கும் பொழுது காற்றில் ஒட்சிசன் அளவு குறைவடைந்து காபனீரொக்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது.



இவ்வாறு அசுத்தமடைந்த காற்றை நாம் மீண்டும் மீண்டும் சுவாசிப்பது ஆபத்தானதாகும். இந்த அசுத்தக்காற்றை மின் விசிறி போட்டு சுற்ற வைப்பதில் எந்தப் பயனும் இல்லை. இதனுள் நுளம்புச் சுருளும் கொளுத்தி வைக்கப்படின் நிலைமை இன்னும் மோசமானதாக இருக்கும்.

இவ்வாறாக அடைக்கப்பட்ட வீட்டினுள் நாம் அடைந்திருக்கும் பொழுது எமக்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற்படும் ஆபத்து இருக்கிறது. தலையிடி, முட்டு, நித்திரைக் குறைவு, இலகுவில் கோபம் அடைதல், கல்வி கற்றலில் கஷ்டம், வாழ்க்கையில் பிரச்சினைகள், வேறுபட்ட நுரையீரல் சம்பந்தமான நோய்கள், கிருமி தொற்றுகை போன்றவையாகும்.

எமது சொத்துக்கள் தொலைந்து விடும் என்று கதவடைப்புச் செய்து எமது சுகத்தை தொலைத்து விடுகின்றோம். சொத்தை பாதுகாக்க எமது சுகத்தை தியாகம் செய்ய துணிந்து நிற்கின்றோம்.

திருடர்கள் எமது உடைமைகளை திருடுகிறார்களோ இல்லையோ எமது உடற் சுகத்தை திருடிக் கொள்கிறார்கள். பூட்டிய வீட்டினுள் நுளம்பு சுருள்கள் நுளம்புகள் இரத்தத்தைக் குடிப்பதைக் குறைக்கின்றனவோ இல்லையோ மனிதனின் வாழ்நாளைக் குடித்து விடுகின்றது.

நாம் ஏன் இந்த கதவடைப்பு போரை கைவிடக்கூடாது? யன்னல் கதவுகளை திறந்து வைப்போம். வீடும் அறைகளும் காற்றோட்டம் உள்ளதாக இருப்பதை உறுதி செய்து கொள்வோம்.

வீட்டின் உட்புறத்தை தூசிகள் படியாதவாறு சுத்தமாக வைத்திருப்போம். நோய்கள் வரும் வரை காத்திருக்காது நோய் வரும் முன் எம்மை காத்துக் கொள்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்